பக்கங்கள்: இருபது + 16

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 09 புதன்கிழமை (26.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 334



13

ரஹ்மானுக்கு மக்கள் தெரிவு விருது



15

கடாபியின் பூதவுடல் இரகசியமாக அடக்கம்



17

வென்றது இந்தியா

# போர்க் குற்ற விசாரணைக்கு ஆஸியும் நேற்று வலியுறுத்து

## மஹிந்த அங்கு சென்றிருக்கும் வேளையில் பகிரங்க அறிவிப்பு வெளியானது

கன்பரா, ஒக்ரோபர் 26

இலங்கையில் மோதல் நடைபெற்ற இறுதிக் காலகட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து முழு அளவிலான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று ஆஸ்திரேலியா நேற்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறது.

இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்று சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும் நிலையிலும், பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆஸ்திரேலியா சென்றுள்ள நிலையிலும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கு முன்னோடியாக இடம்பெறும் வர்த்தக மாநாட்டில் கருத்து வெளியிட்ட ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் ஆஸ்திரேலியாவின் ஒத்த எண்ணப்பாடுகளைக் கொண்ட உலக நாடுகள் கூறுவதைப்போல, போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் முழு அளவில் நடைபெறவேண்டும் என்பதை ஆஸ்திரேலியாவும் வலியுறுத்துவதாகச் சுட்டிக்காட்டினார்.

"தீவிரமான குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் இறுதி யுத்த காலகட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுவது விசாரிக்கப்பட வேண்டும்" - என்றார் ஆஸ்திரேலிய பிரதமர்.

முன்னதாக ஆஸ்திரேலியாவைப் போன்றே கனடாவும் இவ்வாறு வலியுறுத்தலொன்றை விடுத்திருந்தது. போர்க்குற்றங்கள் சம்பந்தமான நீதியான விசாரணை நடக்காத பட்சத்தில் 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ளதாகக் கருதப்

பக் 19

## 4 நாடுகளின் எம்.பிக்கள் குழு நாளை யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம், ஒக்.26

பன்னாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நாளை வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

பிரிட்டன், இந்தியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரை உள்ளடக்கிய குழுவினரே இங்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்களுக்கு பிரிட்டிஷ் நாடா .

பக் 19




22 ஆவது பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள ஆஸ்திரேலியா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கெவின் றூட்டைச் சந்தித்தபோது...

## ஆஸி.சென்ற ஜனாதிபதிக்கு முறையான வரவேற்பில்லை

கொழும்பு, ஒக்.26

பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) தலைவர்களது உச்சி மாநாட்டில் பங்கேற்க, ஆஸ்திரேலியாவின் பேர்த் அனைத்துலக விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வரவேற்க, ஆஸ்திரேலிய அரசின் உயர்மட்டப் பிரதிநிதிகள் எவரும் செல்லவில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கு ஆஸ்திரேலியப் பிராந்திய அதிகாரிகள் மட்டுமே சென்று ஜனாதிபதியை வரவேற்றுள்ளனர்.

ஆஸ்திரேலிய அரசின் சார்பில், மேற்கு ஆஸ்திரேலிய செனட் உறுப்பினர் மார்க் பிசப், மேற்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் எலிசபெத் பெஜட் ஆகியோரே ஜனாதிபதி தலைமையிலான இலங்கைக் குழுவினரை விமானநிலையத்தில் வரவேற்றனர்.

ஆஸ்திரேலிய சமஷ்டி அரசின் அமைச்சர்களோ, உயர்நிலைப் பிரதிநிதிகளோ அல்லது வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளோ இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இது ராஜதந்திர ரீதியிலான பின்னடைவாகக் கொள்ளத்தக்கது என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது மனைவி சிராந்தி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,

பக் 19

### கொமன்வெல்த் நாடுகளைக் கண்காணிக்க

## மனித உரிமைகள் ஆணையர் நியமனம்; யோசனையை இந்தியாவும் எதிர்க்கிறது

கொழும்பு, ஒக். 26

பொதுநலவாய நாடுகள் (கொமன்வெல்த்) அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ள நாடுகளில் மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு என்பவற்றைக் கவனிப்பதற்காக மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவர் தலைமையில் ஏற்படுத்துவதற்கான யோசனையை இந்தியாவும் எதிர்த்துள்ளது.

ஏற்கனவே இந்த யோசனைக்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், இன்று ஆரம்பமாகும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இது தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இந்த கண்காணிப்புப் பொறிமுறை, பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுதியுரைக்கு (மான்டேட்) மாறானது என்று கூறுகின்றது இந்தியா.

அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் வழிகாட்டலில் இந்தக் கண்

பக் 19

வாசகர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள் அனைவருக்கும்

உதயனின் உளம்கனிந்த தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

## மாணவர் போராட்டங்களை ஒடுக்கும் அராஜக நடவடிக்கையில் அரசு தீவிரம்

### அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டம்

கொழும்பு ஒக். 26

''பல்கலைக்கழக மாணவர்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி மாணவர்களின் உரிமைப் போராட்டங்களை ஒடுக்கும் அராஜகச் செயலில் அரசு ஈடுபட ஆரம்பித்துள்ளது. அதன் வெளிப்பாடுகளே மாணவர்கள் மீதான தாக்குல்களும், மாணவரிடையேயான மோதல்களும் ஆகும்.

- இவ்வாறு தெரிவிக்கிறார் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் சாந்த பண்டார.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மற்றும் முகாமைத்துவக் கற்கைபீட மாணவரிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவத் தலைவர், மாணவர் மீதான தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் 'உதயனுக்கு' மேலும் கூறியவை வருமாறு-

யாழ். பல்கலைக் கழகத்

பக் 19

## மஹிந்த மீது போர்க்குற்றச்சாட்டு; ஆஸி.நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

கன்பரா, ஒக்.26

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நீதிவான் நீதிமன்றில் இலங்கையில் பிறந்து ஆஸ்திரேலியாவில் குடியுரிமை பெற்றுள்ள அருணாசலம் ஜெகதீஸ்வரன் என்பவரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.


பொதுநலவாய உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆஸ்திரேலியா சென்றுள்ள நிலையில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வன்னியில் 2009ஆம் ஆண்டு வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அநாதை இல்லங்கள் மற்றும் சமூக

பக் 19

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைப்பெய்யும் சாத்தியம்.

# யாழ். மாவட்ட எம்.பிகள் குறைப்பை எதிர்த்து வல்வெட்டித்துறை நகரசபையில் தீர்மானம்

வடமராட்சி, ஒக்.26

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு செய்துள்ள முன்மொழிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என வல்வெட்டித்துறை நகரசபையில் இந்த மாதத்துக்கான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைக் கூட்டம், சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. தீர்மானங்கள் அனைத்தும் உறுப்பினர்களின் கலந்துரையாடல்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரேயொரு உறுப்பினர் தவிர ஏனையோர் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதை இரத்துச் செய்யக் கோரும் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் முழுமையாகக் குடியமரவில்லை. குறிப்பாக வலிகாமம் வடக்குப் பிரதேசம் மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசம், நாகர் கோயில் கிழக்கு, சுண்டிக்குளம் கிராம அலுவலர் பகுதி என்பவற்றில் மீள்குடியமர்வு நடைபெறவில்லை.

1983 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஜூலைக் கலவரத்தினால் எமது தமிழ் மக்கள் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்துக்கு அகதிகளாகத் தஞ்சம் கோரிச் சென்றனர். அவர்கள் இன்னமும் தமிழகத்திலுள்ள பல முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். பலர் வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர். அவர்களும் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை.

1983 கலவரத்தைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் புலம் பெயர்ந்து சென்று ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களும் மீளத் திரும்பவில்லை.

தற்போது சிறிய எண்ணிக்கையில் தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களிலிருந்து எமது மக்கள் தாயகம் திரும்புகின்றனர் என்பதையும் கருத்தில்கொள்ளவேண்டும். அவர்கள் வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டிருக்கச் சந்தர்ப்பம் இல்லை என்பதையும் தேர்தல்கள் ஆணையாளர் கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் தமிழகத்தில் அகதிகளாக இருப்பவர்களின் பெயர்களும் புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்களின் பெயர்களும் 2010 வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட காரணங்களைப் பார்க்கும் போது தற்போது மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பதிவுக் கணக்கெடுப்பு முடிவுகள் சரியானவை எனக் கருத்தில் கொள்ள முடியாது. ஆகவே யாழ்ப்பாண மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படும் பரிந்துரையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த திருமதி கைலாஜினி இந்திரன் கொண்டு வந்திருந்தார்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்ட சம்பவத்தையும் சபை வன்மையாகக் கண்டித்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த அரசு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கான பிரேரணையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் தெய்வேந்திரன் கொண்டு வந்திருந்தார்.

(உ-236)

# பல்கலை மாணவர் மோதலின் எதிரொலி முகாமைத்துவபீடம் இழுத்து மூடப்பட்டது

## 10 மாணவர்களுக்கு வகுப்புத் தடை

கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைப் பீட மாணவர்களிடையே நேற்று இடம்பெற்ற மோதலை அடுத்து முகாமைத்துவக் கற்கைப்பீடம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் செனிகா இரிபுறேகம தெரிவித்தார்.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் 10 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

முகாமைத்துவப் பீட மாணவர்களுக்கு இடையில் கடந்த இரண்டு தினங்களாக இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்று குறித்தும் அதனால் பல்கலைக் கழகத்துக்குள் ஏற்பட்ட பீதி நிலை தொடர்பிலும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிர்வாக மட்டத்தில் துணைவேந்தர் தலைமையில் முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போதே குறித்த 10 மாணவர்களுக்கும் வகுப்புத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் செனிகா இரிபுறேகம தெரிவித்தவை வருமாறு:-

முகாமைத்துவக் கற்கைப் பீட மாணவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் மோதல் சம்பவம் இடம்பெற்றது. இதில் சிலர் காயமடைந்தனர். இந்த நிலையில், நேற்றுக்காலை முகாமைத்துவக் கற்கைநெறி பீட மாணவர்களுக்கான பரீட்சை ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கலந்துகொள்ள அந்தப் பீட மாணவர்கள் வருகை தந்திருந்தனர். எனினும், சிலர் பரீட்சைக்குத் தோற்றியிருக்கவில்லை.

ஏனென்றால், அவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் மோதலில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரியவந்தது.

இதுதொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நிர்வாக மட்டத்தில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்தேன். அதன்போது இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 10 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்த 10 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், முகாமைத்துவக் கற்கைப்பீடத்தை இரண்டு வாரங்களுக்குத் தற்காலிகமாக மூடவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மோதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இதுகுறித்த விசாரணைகள் ஒழுக்காற்றுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

இதேவேளை குறித்த மாணவர்கள் நேற்றுமுன்தினம் அரசியல் விடயமொன்றை கலந்துரையாடியபோது அதில் எழுந்த வாய்த் தர்க்கமே கைகலப்பாக மாறியது.

(முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## கலால் வரி அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.26

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மதுபானங்களுக்கான கலால் வரியை லீற்றருக்கு 60 ரூபாவால் அரசு அதிகரித்துள்ளது.

உள்நாட்டுச் சாராயத்தின் கலால் வரி 863 ரூபாவிலிருந்து 923 ரூபாவாகவும், வெளிநாட்டு மதுபானங்களுக்கான வரி 1,000 ரூபாவிலிருந்து 1,063 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது. அதற்கமைய ஒரு போத்தல் பியரின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

## பிக்குகள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஒக்.26

திருகோணமலை கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் இருவரையும் விடுதலை செய்யுமாறு கோரி கற்பிட்டி, கண்டல்குளி சமுத்திராசன்ன விகாரையிலுள்ள இரண்டு பிக்குகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் மேலும் சில மீனவர்களும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் 10ஆம் திகதி குறித்த இரண்டு மீனவர்களும் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## புகுமுக மாணவர் வீடு திரும்பினர்

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் விரிவுரைகள் நடைபெறாமையால் அந்த மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

மாணவர்களின் பணிபகிஷ்கரிப்புத் தொடர்வதனால் நேற்று முன்தினம் இந்த விரிவுரைகள் நடைபெறவில்லை. நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்தைவிட பிறமாவட்டங்களைச்சேர்ந்த மாணவர்களே அதிகளவில் பல்கலைக் கழகத்துக்குச் சென்றிருந்தனர்.

மாணவர் ஒன்றியத் தலைவர் தாக்கப்பட்டதை அடுத்து மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்வதால் விரிவுரைகள் நடைபெறவில்லை. கலைப் பீட விரிவுரைகள் ஆரம்பமாவது பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதை அடுத்து புகுமுக மாணவர்கள் திரும்பிச் சென்றனர். (த-4)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த துமிந்தவுக்கு பேச்சுப் பயிற்சி

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் துமிந்த சில்வா எம்.பிக்கு பேச்சுப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், துமிந்த சில்வா எம்.பியிடம் இன்னும் சில தினங்களில் வாக்குமூலம் பெறப்படும் என்றும், நீதிமன்றத்தில் அவர் சாட்சியம் அளிக்கக்கூடும் என்றும் பொலிஸ் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நிகழ்வுகள்

**சிவபூமியில் கலை நிகழ்வுகள்**

தீபாவளித் திருநாளை முன்னிட்டு சிவபூமி முதியோர் இல்லத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளன. இதில் மாணவர்களது இசை, நடனம், நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெறும். (ஒ-10)

**தீபாவளி கலை நிகழ்வுகள்**

சைவ வித்தியா விருத்திச் சங்கம் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் கலை நிகழ்வுகள் சங்கத் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கலந்து கொள்வார். (ஒ-313)

**தீபாவளி விளையாட்டு விழா**

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 63 ஆவது வருட தீபாவளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-313)

**தீபாவளி வழிபாட்டு நிகழ்வு**

தீபாவளி திருநாளை முன்னிட்டு பெங்களூரில் இருந்து வருகை தரும் தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் சீடர் சுவாமி 'ஷரனு' நடத்தும் சிறப்பு வழிபாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை நல்லூர் கோயில் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சிறப்பு வழிபாட்டில் சுவாமி ஷரனு குருபூசை, தியானம், ஆசீர்வாதம் மற்றும் பஜனையை நடத்தவுள்ளார். இதில் அனைவரும் கலந்துகொண்டு அருளாசி பெறுமாறு வாழும் கலை அற நிறுவனம் அறிவித்துள்ளது. (ஒ-323)

**விளையாட்டுப் போட்டி**

தீபாவளி திருநாளை முன்னிட்டு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளை இன்று பிற்பகல் 2 மணிக்கு கழக மைதானத்தில் நடத்தவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் .மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ)

# மன்னார் கடற்படுகையில் காணப்படும் எரிவாயு வளம் வியட்நாமுக்கு

கொழும்பு, ஒக்.26

மன்னாரை அண்டிய கடற்படுகையில் காணப்படும் எரிவாயு வளத்தை வியட்நாமுக்கு விற்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வு நடவடிக்கையை மேற்கொண்டு வரும் 'கெய்ன்ஸ் லங்கா' இந்திய நிறுவனம் கடந்த ஒகஸ்ட் மாதம்முதல் அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பித்ததை அடுத்தே எரிவாயு வளம் கண்டுபிடிக்கப்பட்டது.

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வு மேற்கொள்வதற்கான பிரதேசம் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் இரு பகுதிகள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதியில் ரஷ்யா எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

புதிதாக உருவாகியுள்ள எரிவாயு வளம் பெறுதல் தொடர்பான ஒப்பந்தமொன்று அண்மையில் வியட்நாம் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின் போது இலங்கை மற்றும் வியட்நாம் நாடுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வியட்நாமிய அரசின் கீழ் இயங்கும் 'பெற்றோ வியட்நாம் எக்ஸ்புளரேசன் புறடக்சன்' நிறுவனத்தின் பொறியியலாளர்கள் குழுவொன்று இன்னும் சில நாள்களில் இதற்கென இலங்கைக்கு வரவிருக்கின்றது. இந்தக் குழுவினர் மன்னார் வளைகுடாவில் எண்ணெய் வள ஆய்வுப் பகுதியில் எரிவாயு வளம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதுடன் அகழ்வுப் ப ணி க ளை யு ம் ஆரம்பிக்கவுள்ளதாக அந்த நிறுவன உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் ஜனாதிபதியின் அண்மைய இலங்கை விஜயம் குறித்து பிரபல்யப்படுத்திய இலங்கை அரசு எரிவாயு வளம் தொடர்பாக இரு நாடுகள் மத்தியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் குறித்து பொது மக்களுக்கு தெரியப்படுத்தத் தவறியுள்ளது.

உலகின் 18 நாடுகளில் மொத்தமாக 23 எரிவாயு மற்றும் பெற்றோலிய எரிபொருள்கள் அகழ்வு நடவடிக்கைத் திட்டங்களை மேற்கொண்டு வரும் வியட்நாமிய அரசு தனது புதியதொரு திட்டமாக இலங்கையின் எரிவாயு வளத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளது. (ஒ-ஞ)

# திருடிய பொருள்களைக் கடையில் விற்கச் சென்றவர்கள் மாட்டினர்

## மானிப்பாய் பொலிஸார் தொடர்ந்து விசாரணை

சண்டிலிப்பாய், ஒக்.26

திருடிய பொருள்களைக் கடைகளில் விற்பதற்காகக் கொண்டு சென்ற திருடர்கள் பொலிஸார் விரித்த வலையில் வகையாக மாட்டிக் கொண்டனர். பொருள்களைக் கைப்பற்றிய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நான்கு இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு நள்ளிரவு நேரம் சுதுமலை வடக்கிலுள்ள ஒரு கடையின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர், பால்மா உட்படப் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றிருந்தனர்.

இத் திருட்டுப் பற்றி கடை உரிமையாளர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததைத் தொடர்ந்து, விசாரணையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொறுப்பதிகாரி மல்கம், இன்ஸ்பெக்டர் சந்திரபால, சார்ஜன்ட் மதுரா, கான்ஸ்டபிள்கள் அரிச்சந்திரா, ஜானகே ஆகியோர் விரைந்து சென்று இரு இளைஞர்களைக் கைது செய்து திருடப்பட்ட பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தத் திருட்டுத் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் மேலும் இரு இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதேவேளை மானிப்பாயிலுள்ள கணினிப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற திருட்டு சம்பந்தமாக இளைஞர் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் திருடப்பட்ட பொருள்களைக் கைப்பற்றியதுடன் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-115)

# பரீட்சார்த்திகள் பற்றுச்சீட்டுடன் வரவும்

யாழ்ப்பாணம், ஒக்.26

தேசிய கல்வி நிறுவனத்தின் (என்.ஐ.இ) கல்வி டிப்ளோமா இறுதிப் போட்டிப் பரீட்சையில் பங்குபற்றவுள்ள ஆசிரிய மாணவர்கள் 1050 ரூபாவை இலங்கை வங்கியில் செலுத்திய பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் சமுகம் தருமாறு சிரேஷ்ட பிரிவு பிராந்திய நிலையப் பணிப்பாளர் திருமதி த.விஸ்வநாதன் கேட்டுள்ளார். (எ)

# கடையில் களவெடுத்த பணத்தை எண்ணிக்கொண்டிருந்த சிறுவன்

## பொலிஸாரிடம் பிடிபட்டான்

தென்மராட்சி, ஒக்.26

இரவு கடையொன்றுள் புகுந்து எடுத்த பணத்தை மறுநாள் காலை நவீன சந்தை மேல் மாடியில் வைத்து எண்ணிக்கொண்டிருந்த 13 வயது சிறுவன் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள தேநீர்க் கடையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 23 ஆம் திகதி இரவு நுழைந்த இந்தச் சிறுவன் அங்கிருந்து 13 ஆயிரம் ரூபா பணத்தையும் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கிற் காட்டுகளையும் எடுத்துச் சென்றுள்ளான்.

இந்தப் பணத்தை நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் வைத்து எண்ணிக்கொண்டிருக்கையில் பொலிஸார் கைது செய்து பணத்தையும் கிற் காட்டுகளையும் மீட்டனர்.

இந்தச் சிறுவனை நேற்று முன்தினம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது சான்று பெற்ற பாடசாலையொன்றில் அனுமதிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கினை எதிர்வரும் நான்காம் திகதிக்கு ஒத்திவைத்தார். (த-207)

# துணுக்காயில் கல்வி வலயத்துக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஒக்.26

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட துணுக்காய் கல்வி வலயக் கட்டடம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவினால் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றையதினம் காலை 9.30 மணிக்கு இந்தப் புதிய கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-14)

# அரச திணைக்களங்களுக்கு வாகனம் கையளிக்கும் நிகழ்வு

## நாளை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், ஒக்.26

வடக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களின் பாவனைக்கென புதிய வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் புதல்வரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வாகனங்களைக் கையளிக்கவுள்ளார்.

இதன்போது ஐந்து ஹைஏஸ் வான்கள், லொறி ஒன்று, ஒரு பிக்கப் என்பன கையளிக்கப்படவுள்ளன.

ஐந்து ஹைஏஸ் வான்களும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, துணுக்காய், மன்னார் ஆகிய கல்வி வலயங்களுக்கும், மாகாணக்கல்வி திணைக்களத்துக்கும் வழங்கப்படவுள்ளன. யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இவை வழங்கப்படுகின்றன. இந்த வாகனங்களின் இறக்குமதிக்கான வற் வரி செலவுகள் வடக்கு மாகாண சபை ஆளுநர் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

'நிக்கொட்' நிறுவன நிதியுதவியுடன் லொறி ஒன்று கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்துக்கு வழங்கப்படவுள்ளது. வடமாகாண சபை ஆளுநர் நிதியுதவியுடன் 'பிக்கப்' ரக வாகனம் ஒன்று கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் யுனிசெவ் நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (த-14)

# பொதுச் சபைக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக்.26

விவசாய சம்மேளன இல்லத்தில் பொதுச் சபைக் கூட்டம் இடம்பெறாதமையால் கடந்த 24ஆம் திகதி இடம் பெற்ற கூட்டத்தை விவசாயிகள் பகிஷ்கரித்தனர்.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்துக்குட்பட்ட விவசாயிகளே இவ்வாறு கூட்டத்தைப் பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன பொதுச் சபைக் கூட்டம் கட்டுடை விவசாய சம்மேளன இல்லத்தில் கடந்த 15 வருடங்களாக இடம்பெற்று வந்தது. மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் பொதுச் சபைக்கூட்டத்தை இம்முறை கட்டுடை அரசடி விநாயகர் ஆலய முன்றிலில் கூட்டியிருந்தார்.

ஆனால் 231 விவசாய உறுப்பினர்களைக் கொண்ட மேற்படி சங்கக் கூட்டத்தில் 50 விவசாயிகள் மட்டுமே வருகை தந்திருந்தனர்.

ஏனைய விவசாயிகள் கூட்டத்தைப் பகிஷ்கரித்ததுடன் கட்டுடை பிரதான வீதியில் உள்ள விவசாய சம்மேளன இல்லத்தில் பொதுச் சபையைக் கூட்டினால் மட்டுமே கூட்டத்துக்கு வருகை தருவோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனால் காலவரையறையின்றிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் தெரிவித்தார்.

மேற்படி பொதுச் சபைக் கூட்டத்துக்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அதிகாரி திருமதி.பாமா மகேந்திரன் வருகை தந்திருந்தார். (த-302)

# வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு புதிய ஓட்டோ

வடமராட்சி, ஒக்.26

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் போக்குவரத்துச் சேவைக்காக ஓட்டோ ஒன்று பிரதேச சபையினால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பிரதேச சபைக்கு அரசினால் வழங்கப்பட்ட வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்ததினால் காரியாலயத்தின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாதநிலை ஏற்பட்டது.

பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்ட போது ஓட்டோ ஒன்று வாங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஓட்டோ கொள்முதல் செய்யப்பட்டு காரியாலய தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதே வேளை பழுதடைந்த நிலையிலுள்ள வாகனமும் தற்பொழுது திருத்தப்பட்டுச் சேவையில் ஈடுபட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (த-115)

# ஓய்வூதியம் பெறுபவர்களில் 20 ஆயிரம் பேர் வெளிநாட்டில்

கொழும்பு, ஒக்.26

அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறுவதில் 20 ஆயிரம் பேர் வரை வெளிநாடுகளில் வாழ்வதாக ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்படி ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கை கடுமையான பரிசீலனைகளுக்கு உள்ளாக்கப்பட்டே மேற்கொள்ளப்படுவதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன தெரிவித்தார்.

மேலும் வெளிநாடுகளில் இருந்தவாறு ஓய்வூதியம் பெற்று வரும் நபர்கள் மீள் பதிவு செய்யப்பட்டதன் பின்னரே சம்பந்தப்பட்ட ஓய்வூதியத்தை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் திலகரத்ன தெரிவித்தார்.

இதனிடையே கடந்த இரண்டு ஆண்டு காலத்துக்குள் அரச ஓய்வூதியம் பெற்றுள்ள வெளிநாடுகளில் வசிக்கும் 3000 பேர் வரையிலானோர் குறித்து எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையென திலகரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் மாத்திரம் வெளிநாடுகளில் வாழும் ஓய்வூதியர்களுக்கு 250 கோடி ரூபா ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கணிசமான ஒரு தொகை நிதி இலங்கையிலிருந்து வெளிச் செல்வதே இங்கு நிலவும் சிக்கலான நிலைப்பாடு எனவும், எனவே எதிர்வரும் ஆண்டுகளில் வெளிநாடுகளில் வாழும் அனைத்து ஓய்வூதியர்களையும் தெளிவாக இனங்கண்டு, அவர்கள் புதிய முறைமையொன்றுக்கு அமைய ஓய்வூதியம் வழங்கும் திட்டத்துக்குள் உள்வாங்கப்படும் செயற்பாடு இடம் பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-22)

உதயன்
26 ஒக்ரோபர் 2011 புதன்கிழமை

# கடாபி கொலைக்கு விளக்கம் கேட்டதை வரவேற்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஒக்.26

லிபியாவை கடந்த பல தசாப்த காலமாக ஆட்சி செய்த கேணல் கடாபியின் மரணம் தொடர்பில் இலங்கை விளக்கம் கோரியுள்ளமை சிறந்தது. அதே போன்று, முல்லேரியாவில் கொல்லப்பட்ட பாரத லக்ஷ்மனின் கொலை தொடர்பான அறிக்கையையும் அரசு வெளியிட வேண்டும் - என்று ஐ.தே. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் சட்டம் இன்று குழியில் விழுந்துள்ளதால் மக்கள் மிகவும் அபாயகரமான சூழலில் வாழ்ந்து வருகின்றனர். தரம் குறைந்த பொருள்கள் இறக்குமதி போன்றே நாட்டு அரசின் அனைத்து நடவடிக்கைகளும் தரம்குறைந்துள்ளன - என்றார்.

(ச-சி)



தும்பளை யோகசாந்தி நிலையத்தினரால் வல்வை சிதம்பராக் கல்லூரியில் கடந்த 14 ஆம் திகதி யோகாசனக் கண்காட்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் வல்வை சிதம்பராக் கல்லூரி அதிபர் கி.இராஜதுரை, தும்பளை யோகசாந்தி நிலைய ஆசிரியர் தே.தேவராஜேந்திரம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் தொ.நேசன் யோகப் பயிற்சியில் ஈடுபடுகின்றார்.

## கல்முனை தமிழ்க் கிராமங்களில் அபிவிருத்திக் குழு அமைக்க முயற்சி

அம்பாறை, ஒக். 26

''கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள ஏழு தமிழ்க்கிராமங்களையும் உள்ளடக்கியதாக அபிவிருத்திக்குழு ஒன்றை நாம் அமைத்து, இந்தக் குழுவின் ஆலோசனைகள், சிபார்சுகளின் அடிப்படையில் மாநகர சபை ஊடான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்''

- இவ்வாறு கல்முனை மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

கல்முனை குருந்தையடியில் நடைபெற்ற மக்கள் சந்திப்புக் கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த கல்முனை மாநகர சபைத்தேர்தலில் தமிழ் மக்களில் ஒரு சாரார்வாக் களிக்காமல் மௌனம் காத்ததால் கடந்த முறைபெற்ற உறுப்பினர்களின் தொகையில் இரண்டை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு தமிழ் மக்களின் மாநகர சபை அரசியலை சற்று மலினப்படுத்தியுள்ள போதிலும், தமிழரசுக் கட்சி சார்பில் இந்த முறை தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களும் இந்தக் குறையை நிவர்த்திக்கும் வண்ணம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.

இதே வேளை கடந்த முறை கல்முனைப் பகுதியிலிருந்து மூன்று பிரதி நிதிகள் கல்முனை தமிழ்மக்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டு பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் இந்தமுறை எவரும் தெரிவு செய்யப்படவில்லை இது கவலையளிக்கும் விடயமாயினும் கல்முனை தமிழ் மக்கள் இதற்காகக் கவலை கொள்ளத்தேவையில்லை

தமிழரசுக்கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள நான்கு உறுப்பினர்களுள் எந்நேரமும் இந்த இடைவெளியை நிரப்பும் வகையில் செயற்படுவோம். அபிவிருத்தியில் முழு மூச்சாக ஈடுபடுவோம்.

இதேவேளை கல்முனை மாநகர சபைப்பிரிவிலுள்ள எந்தத் தமிழ்க்கிராமமும் மாநகர அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்படவோ, கவனிப்பின்றி விடப்படவோ நாம் இடமளிக்கமாட்டோம்.

கல்முனை மாநகரசபைப் பிரிவிலுள்ள ஏழு தமிழ்க் கிராமங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் தலா இருவரை மக்கள் அபிமானம் பெற்றவர்களாகத் தெரிவு செய்து விரைவில் அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்படும் என்றார்.

(ச-30)

## சின்னத்திரை நடிகைக்கு பிடியாணை பிறப்பிப்பு

கொழும்பு,ஒக்.26

இலங்கைசின்னத்திரைநடிகை அனுஷ்கா சொனாலி சயக்காரவை கைதுசெய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுமுன்தினம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

குறித்த நடிகை தனது தந்தையை அச்சுறுத்தி ஒரு லட்சம் ரூபா பணம் பெற முயற்சித் தார் என்று குற்றம் சுமத்தப்பட்டு தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜராகத் தவறியதையடுத்தே நீதிவான் லங்கா ஜயரட்ன இந்தப் பிடிவிறாந்தைப் பிறப்பித்தார்.

கொம்பனித்தெரு பொலிஸார் தண்டனைக் கோவை 490 மற்றும் 374ஆம் பிரிவுகளின் கீழ் நடிகை அனுஷ்கா சொனாலி சயுக்காரவுக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளனர்.

தனது மகளுக்குத் தான் பல்வேறு சந்தர்ப்பங்களில் 4 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார் எனவும் தன்னை அச்சுறுத்தி மேலும் ஒரு லட்சம் ரூபாவை பெற முயற்சித்தார் எனவும் அந்த நடிகையின் தந்தை பொலிஸில் முறைப்பாடுசெய்திருந்தார்.

அதையடுத்து சொனாலி சயுக்கார கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-சி)

## முஸ்லிம் காங்கிரஸின் வெள்ளிவிழா நவம்பரில்

அம்பாறை, ஒக்.26

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 25 வருட நிறைவு வெள்ளிவிழா நவம்பர் மாதம் 29ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி கொழும்பு பாஷாவியாவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வாறு அரசியல் கட்சி யாகப் பிரகட னப்படுத்தப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டிய வெள்ளி விழாவை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் அரசியல் அதி உயர் பீட உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் தெரிவித்தார்.

இந்த வெள்ளிவிழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் வெளிநாட்டு இராஜதந்திரிகள், மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழாவில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காகவும் கட்சி வளர்ச் சிக்காகவும் பங்காற்றிய பலர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான தெரிவுகள் மாவட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-30)

## உடுவில் மகளிர் கல்லூரியின் 3 ஆசிரியர்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

உடுவில் மகளிர் கல்லூரியில் 25 வருடங்களுக்கு மேல் சிரேஷ்ட நிலையில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய மூன்று ஆசிரியர்கள் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌர்விக்கப்பட்டனர். உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ் மூன்று ஆசிரியர்களையும் பாராட்டித் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவித்தார். மாவட்டமட்டத்தில் அளவையியலும் விஞ்ஞானவியலும் பாடத்தினை கற்பித்து பல மாணவர்களை வடமாகாண ரீதியில் முன்னிலை பெற உதவிய உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.எஸ் மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரியில் தமிழ் பிரிவில் தடம்பதித்து ஆசிரியர் சேவை யாற்றிய திருமதி எஸ். சிவலிங்கராஜா, ஆங்கில மொழியைக் கற்பித்து மாணவர்களை ஆங்கிலத்தில் தேர்ச்சியடையச் செய்த செல்வி.செல்வராணி செல்லத்துரை ஆகிய மூன்று ஆசிரியர்களுமே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

(த-302)

மக்கள் வங்கியின்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பின்வரும் மக்கள் வங்கிக் கிளைகள்
தீபாவளி தினத்தில்
வங்கி
நடவடிக்கைகளுக்காக
காலை 8.00 மணி முதல்
பிற்பகல் 1.00 மணி வரை
திறந்திருக்கும் என்பதை
மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

நெல்லியடி கிளை
சாவகச்சேரி கிளை
சுன்னாகம் கிளை
கன்னாதிட்டி கிளை

PEOPLE'S BANK

ஸ்ரீ ரஞ்சனி புத்தகசாலை
ஸ்ரார் பப்ளிக்கேசன்
190 ஜம்பட்டா வீதி கொழும்பு 13
எமது 3ம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் யாழ் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன.
- அறிவொளி
- பரீட்சைநோக்கு
- விஞ்ஞான ஒளி
- கணித வழி
- பரீட்சைப் பொதி
- விஞ்ஞானப் பாடநூல்கள்
- விஞ்ஞான 30 வருட கடந்தகால வினாவிடை
இ. நிர்மலன் : 0777 413990 0114947856

வீட்டுப்பணியாளர் தேவை
பொறுப்புகள் இல்லாத வீட்டுப் பணியாளர் கணவன், மனைவி அல்லது தனியொரு பெண் 30 வயதுக்கு மேற்பட்டவர்கள்தேவை.
தொடர்பு: 0776744371

வாடகைக்கு
யாழ்.கே.கே.எஸ் வீதியில் பூநாறிமரச் சந்தியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் சபாபதிவீதியில்இருகடைகள்வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 1639, 0041435379615

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொதுநலவாய மாநாட்டின் முடிவு எந்தப் பக்கமோ?!

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மூன்று நாள் மாநாடு, ஆஸ்திரேலியாவில், பேர்த் நகரில் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்த மாநாட்டில் பங்குபற்றும் பொருட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பெருங்கொத்தாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உட்பட 108 பேர் கொண்ட குழு இலங்கையில் இருந்து பயணமாகி உள்ளது.

மறுபுறத்தில், மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கை ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு ஆஸ்திரேலியாவின் மனித உரிமை வழக்கறிஞர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கு முந்திய தடவை, 2009 ஆம் ஆண்டில், ஸ்பெயின் நாட்டில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றவேளை, ஜனநாயக ஆட்சி, சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்வதற்காக பொதுநலவாய அமைப்பில் மனித உரிமை ஆணையாளர் பதவியை உருவாக்க வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

இந்த யோசனையைச் சிபாரிசு செய்த அங்கத்துவ நாடுகளான பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், உகண்டா, கானா, ஜமெய்க்கா, கயானா உட்பட பொதுநலவாய நாடுகளின் சட்ட வல்லுநர் குழுவுக்குத் தலைமை வகித்தவர் பாகிஸ்தானைச் சேர்த்தவர்.

சட்ட வல்லுநர் குழுவின் சிபார்சு குறித்து இப்போதையை மாநாட்டில் ஆராய்ந்து, அதனை ஏற்றுக்கொண்டு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்று ஓர் அமைப்பை உருவாக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர்வு கூறப்படுகிறது. பிரிட்டன், கனடா, நியூஸிலாந்து போன்ற முன்னணி நாடுகள் இதில் கூடுதல் அக்கறை காட்டுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனால், சுதந்திர இயல்புடைத்தான இந்தப் பதவியை உருவாக்குவதனை இலங்கை அரசு விரும்பவில்லை என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விடுதலைப் புலிகளின் பிரசாரத்தை ஊக்குவிக்கப் பயன்படுவதாக இலங்கை இப்போது உலகநாடுகள் பலவற்றிலும் தனது ராஜதந்திரிகள் மூலம் பரப்புரை செய்துவருகிறது.

அதனை முன்னுதாரணமாக வைத்து, பொதுநலவாய மன்றத்திலும் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நிறுவுவதைத் தடுப்பதற்கு அங்கத்துவ நாடுகளின் ஆதரவைத் தேடுவதற்கு மும்முரமாக முயற்சிக்க உள்ளது. அதனாலேயே மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னரே இலங்கைக் குழு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் இலங்கை அரசு தனது முயற்சியில் வெற்றி அடையுமா என்பதனைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறு அந்த நாட்டின் மனிதவுரிமை வழக்கறிஞர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவை நடைபெற்றனவா என்பது குறித்து இப்பத்தி எழுதப்படும் போது தகவல்கள் எதுவுமில்லை.

இதற்கிடையில்-

''இலங்கையின் வகைகூறும் தன்மை, பொதுநலவாய அமைப்பின் பொதுவான நீதித்தன்மை'' என்ற தலைப்பில் கடந்த 20ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடந்த கருத்தரங்கில், இலங்கை அரசு போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக பேராசிரியர் பாமியன் கிங்ஸ்பெரி குற்றம் சாட்டியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. படைத்தரப்பால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்களாலேயே இவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்ததாகவும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த சாட்சியங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போதுமானவை-

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் மூலம் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் வரை இலங்கையைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்துவதற்கான நடைமுறைகள் உள்ளன- எனவும் பேராசிரியர் கிங்ஸ்பெரி சுட்டிக்காட்டியமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசு உரிய வகையில் பொறுப்புக் கூறாதவரை, 2013ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாகக் கனேடியப் பிரதமர் ஸ்ரெபன் ஹார்ப்பர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இத்தகைய ஒரு பின்புலத்தில், பொதுநலவாய மாநாட்டில் ஐந்து கண்டங்களையும் சேர்ந்த ஐம்பத்து மூன்று நாடுகளில் இருபத்தேழு நாடுகளைத் தனது பக்க நியாயத்தால் அல்லது பரப்புரை மற்றும் ஆதரவுத் தேட்டத்தால் அணிசேர்க்க முடிந்ததா என்பது ஆகக் குறைந்தது ஆறு நாள்களில் தெரிந்துவிடும்.

# 3,500 இலங்கையருக்கு வருடாந்தம் இத்தாலியில் வேலை வாய்ப்புகள்

## இரு நாடுகளிடையேயும் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஒக்.26

இத்தாலி அரசின் அனுசரணையுடன் ஆண்டொன்றில் 3,500 இலங்கையருக்கு இத்தாலியில் வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

இதற்கமைய 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், 3,500 பேருக்கு இத்தாலியில் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இத்தாலியின் தொழிலாளர் நலன்சார் அமைச்சர் மயுரிசினோ சாக்கோணி மற்றும் இலங்கையின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரோ ஆகியோர் இத்தாலியில் வைத்து கடந்த 20 ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டத்தை வகுப்பதற்கு இரு நாட்டு அதிகாரிகளிடையே கலந்துரையாடல்களும் இடம் பெற்று வருகின்றன.

ஏற்கனவே இத்தாலியில் பணிபுரியும் 75 ஆயிரம் வரையிலான இலங்கை மக்களின் வேலைவாய்புக்களும் பாதுகாக்கப்படும் வகையில் இந்த ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. மேற்படி வேலைவாய்புக்களுக்காக அடுத்த ஆண்டிலிருந்து இத்தாலியமொழி மற்றும் தொழில் பயிற்சிப் பாடநெறிகள் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து வேலை வாய்ப்புப் பணியகத்தின் www.Slbfe.lk இணையத்தினூடாக இந்த வேலை வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த)

# வடக்கு மாகாண சபை ஊழியரின் பெயர்வழிக் கோவைகள் சீர்படுத்தல்

## விசேட குழு நியமிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

வடக்கு மாகாணப் பொது நிர்வாக செயலகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சபையின் ஊழியர்களின் பெயர் வழிக்கோவைகளைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த கால யுத்தம் மற்றும் சுனாமி காரணமாக அரச உத்தியோகத்தர்களது பெயர் வழிக்கோவைகள் தொலைந்தும் அழிந்தும் போயுள்ளன.

விரைவாக இதனை சீர் செய்து ஊழியர்களின் நலன்களைப்பேணும் நோக்குடன் இந்த செயற்பாட்டுக்கென ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு நேரடியாக அலுவலகங்களுக்குச் சென்று ஊழியர்களின் பெயர் வழிக் கோவைகளைப் பரிசீலனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.இந்தச் செயற்பாடுகள் ஒரு மாதகாலத்துக்குள் நிறைவேற்றப்படவேண்டிய தேவையுள்ளதால் அலுவலகப் பொறுப்பதிகாரிகள் ஊழியர்களின் பெயர் வழிக் கோவைகளுக்கு தேவையான ஆவணங்களை சீர்படுத்தி ஊழியர்களின் பதவி உயர்வு, ஓய்வூதியம் மற்றும் நிலுவைகள் தொடர்பான விவரங்களை செய்து முடிக்க வேண்டும்.

சகல திணைக்களங்களதும் ஊழியர்களின் பெயர் வழிக்கோவைகள் தொடர்பான விவரங்களை இந்தக் குழுவினர் 3 மாதகாலத்துக்கோ அல்லது ஆறுமாதகாலத்துக்கு ஒரு முறையோ நேரடியாகச் சென்று பரிசீலனை செய்யவுள்ளனர்.

அத்துடன் சகல உத்தியோகத்தர்களதும் பெயர் வழிக்கோவைகள், விரைவுபடுத்து தல் முன்னேற்ற அறிக்கை என்பன ஒவ் வொரு மாதமும் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும். இவை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

## வைத்தியர்கள் இல்லாமையால் மூடப்பட்ட

# 47 சுகாதார சேவை நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு அரசு திட்டம்

கொழும்பு,ஒக்.26

வைத்தியர்களின்றி மூடப்பட்டுள்ள அரச வைத்தியசாலைகள் உள்ளிட்ட 47 சுகாதார சேவை நிலையங்களை இந்த ஆண்டின் இறுதிக்குள் மீளத் திறப்பதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அடுத்த கட்டமாக வைத்தியர் குழுவுக்கு நியமனங்கள் வழங்கப்படும்போது இந்த வைத்திய சேவை மையங்களுக்கு வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் வைத்தியர்கள் இன்றி நாடு முழுவதிலும் 97 சுகாதார சேவை மையங்கள் மூடப்பட்டிருந்ததாகவும் அவற்றில் 50 சுகாதார மையங்களுக்கு வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டு அவை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மூடப்பட்டுள்ள சுகாதார சேவை மையங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, அனுராதபுரம், கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவற்றுள் பெருமளவானவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சுகாதார சேவை நிலையங்கள் எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

(த-22)

# 10 அரச நிறுவனங்களின் செயற்பாடு குறித்து 'கோப்' விரைவில் விசாரிக்கும்

கொழும்பு, ஒக்.26

கணக்கீடுகளை உரிய வகையில் பேணத் தவறியமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள மேலும் பத்து அரச நிறுவனங்கள் 'கோப்' எனப்படும் அரச நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முக்கியமாக மூன்று பல்கலைக்கழகங்கள், காணி மீள் நிர்மாண அதிகாரசபை, 'சீடா' நிறுவனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன இவற்றில் அடங்கும்.

குறிப்பிட்ட பத்து அரச நிறுவனங்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்தறியும் நடவடிக்கைகள் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் அரச நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு முன்பாக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அந்தக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

(த)

உதயன்
26 ஒக்ரோபர் 2011 புதன்கிழமை

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
பணவரவுகளில் இருந்த தடை, தாமதங்கள் சீராகும். பிள்ளைகள் கேட்ட பொருள்களை மறுக்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள். தொலைபேசி மூலம் உறவினர்கள் தெரிவிக்கும் செய்தியால் மகிழ்ச்சி, உற்சாகம் அடையலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு நன்றியுடன் பதில் உதவி செய்து பெருமை அடைவீர்கள். ஆதாயகரமான நாள்.

**இடபம்:**
என்னதான் சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் கணிசமான செலவுகளைச் சந்திக்கலாம். சில விடயங்களில் தவறு செய்து விட்டோமோ என கவலை அடைவீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்களின் உதவிகளை மறக்காமல் நடந்து கொள்ளலாம். உறவினர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டும்.

**மிதுனம்:**
திறமை, புத்திசாதுர்யம் வெளிப்படும் நாள். கடினமான சில நபர்களிடம், கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். மாற்று மத நண்பர்களை நம்பி ஒப்படைத்த சில வேலைகள் முடியாமல் போகலாம். ஏழை உறவினர்கள் சிலருக்கு பண உதவிகள் செய்வீர்கள். தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**கடகம்:**
பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்..

**சிங்கம்:**
உறவினர்கள், அண்டை அயலார் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலர் மீது கோபம் வந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். சில விடயங்களில் உல்லாசமாக நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். எதற்காகவும், யாருக்காகவும் உங்களின் முடிவில் மாற்றம் செய்து கொள்ள மாட்டீர்கள். பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று, இன்றே வந்து சேரலாம்.

**துலாம்:**
சூழ்ச்சியாக செயற்படும் சிலரை அறிந்து கொண்டு ஒதுங்கிக் கொள்வீர்கள். குல தெய்வ வழிபாட்டில் நாட்டம் செல்லும். பணம் தொடர்பாக சில நல்ல செய்திகளைக் கேட்கலாம். எதிர்பார்த்த விஷயம் ஒன்று நடக்காமல் ஏமாற்றம் அடையலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றை உறவினர்கள் வருகையால் மாற்றி அமைக்கலாம்.

**விருச்சிகம்:**
உறவினர்கள், நண்பர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். சில விடயங்களில் தன்னம்பிக்கையுடன் நடந்து கொள்வீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும்.

**தனுசு:**
தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுக்க முன்வரும் நாள். நினைத்த காரியங்கள் நடக்க வேண்டும் என, இறை வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். போலீஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சொந்த பந்தங்கள் சிலருக்கு ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

**மகரம்:**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சில விடயங்கள் நடப்பது போல தோன்றினாலும் நடக்காமல் போகலாம். சிலரிடம் பொருள்கள் வாங்கி விட்டு அதற்கு பணம் கொடுக்காமல் கடன் சொல்லலாம். உங்களின் சிரமமான சூழ்நிலைகளை மற்றவர்கள் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம். வீண் பயம் உண்டாகும்.

**கும்பம்:**
வாங்க நினைத்த ஒரு பொருள் கிடைக்காமல் பல இடங்களுக்கு அலைய நேரிடலாம். உங்களை மட்டம் தட்டி சிலர் பேசலாம். வீட்டைச் சீரமைப்பதில், ஒழுங்குபடுத்துவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். தண்டச் செலவு உண்டு.

**மீனம்:**
புதுத்தெம்பு, தைரியத்துடன் செயற்படும் நாள். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். பெற்றோரின் மனம் அறிந்து நடந்து கொள்ள முற்படுவீர்கள், கிடைக்குமோ, கிடைக்காதோ என நினைத்த பொருள் எளிதில் கிடைக்கும். உங்களின் கடந்த கால அனுபவங்களை மற்றவர்களிடம் சொல்வீர்கள். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.

# லொறியில் பெண்களைக் கடத்த முயற்சி; கன்னியாப் பகுதியில் இருவர் கைது

திருகோணமலை, ஒக்.26

திருகோணமலை -ஹொரவப் பொத்தானை வீதியில் இரண்டு பெண்களை லொறியொன்றில் கடத்திச்செல்ல முற்பட்ட இரண்டு பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பெண்களும் ஹொரவப் பொத்தானை - திருகோணமலை வீதியினூடாக கோமரங்கடவல பகுதிக்குச் செல்ல பஸ்ஸுக்காகக் காத்திருந்த வேளையிலேயே இந்தக் கடத்தல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாகனமின்றித் தவித்ததால் இரண்டு பெண்களும் சுயவிருப்பத்தின் பேரில் லொறியில் ஏறிச்சென்றுள்ளனர். திரியாய் சந்தியில் இறங்குவதற்காக முயற்சித்தபோதும் சாரதி லொறியை நிறுத்தவில்லையெனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மொறவெவ பொலிஸ் சோதனைச் சாவடியில் சாரதி லொறியை நிறுத்தாது தப்பிச் செல்ல முற்பட்டபோது அதனைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் கன்னியா பகுதியில் வைத்து சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சதீஸ்தரன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு கமநலசேவை திணைக்களம் அறிவிப்பு

கொழும்புத்துறை,ஒக்.26

பெரும்போக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதையடுத்து வளர்ப்பு கால்நடைகளைக் கட்டிவைத்து வளர்க்குமாறு யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக் களம் அறிவித்துள்ளது.

கட்டாக்காலிகளாக விடப்படும் கால்நடைகள் நெல்வயல்களில் புகுந்து பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பட்சத்தில் அவை பிடித்துக்கட்டப்பட்டு கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு தண்டம் விதிக்கப்படும்.

இந்த நடைமுறை விதைப்பு ஆரம்பித்து அறுவடை மேற்கொள்ளப்படும் வரை இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் அந்தந்த பிரதேச கமநல சேவைகள் அலுவலகங்கள் மூலம் ஒலி பெருக்கிகள் வழியாக பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

கால்நடைகள் வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளைக் கட்டி வைத்து வளர்ந்து விவசாய மேம்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (ச-135)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் மோதல்

கொழும்பு,ஒக்.26

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்த மோதல் சம்பவம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
ஸ்பிரே பெயின்ரிங்,
பிளேற்றிங் ( மொப்பிங்),
கண்ணாடி வகைகள் பொலிசிங்,
பைவர் மோல்டிங்
என்பன நவீன தொழில் நுட்ப முறை மூலம் செய்து கொடுக்கப்படும்.
வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்
286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
தொடர்பு: 0773512591



நிலக்கறையான், எலி, கரப்பெத்தான்நுளம்பு, இலையான் ஆகியவற்றிலிருந்து விடுதலை வேண்டுமா இன்றே நாடுங்கள்.
COLOMBO PEST CONTROL SERVICE
இல. 527 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 0213207007
0777666684

Pharmacy Assistant (1 Yr)
தனியார் மருந்தகங்களிலும்,மருத்துவமனைகளிலும்(வெளிநாட்டிலும்) வேலை வாய்ப்பை நாடும் அனைவரும் கற்கக்கூடிய கல்வி.
Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U-Education -"Practical and Result Oriented." Tel:0776458253

To Honour the Visit of the Sri Lankan Diocesan Directors for Social Communication to Jaffna
திருமறைக் கலா மன்றத்தின் தயாரிப்பில் உருவான
"அற்றைத் திங்கள்"
இலவசக்காட்சி
காலம்: 26.10.2011 புதன்கிழமை (தீபாவளி தினத்தில்)
நேரம் : மாலை 6.30 மணி
இடம் : கலைத்தூது கலையகம்,
286 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அனைவரும் வருக
யாழ்.மாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

முகவர்கள் தேவை
ஜினசேன பிரைவேற் லிமிடெற்,
176/1, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு-05.
1905 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனமானது 100 வருடங்களுக்கு மேலாக விவசாய இயந்திர விற்பனைச் சந்தையில் முன்னணி வகித்து வருகிறது. ஜினசேனவின் 21 விற்பனை சேவை நிலையங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் இயங்கி வருகிறது. தற்போது யாழ்ப்பாண ஜினசேன விற்பனை சேவை நிலையத்தின் கீழ் தொழிற்பட முகவர்கள் தேவை.
எமது பொருட்கள்: Centric WaterPumps, Robin Engine Pumps (Japan), Agrimec Two Wheel Tractors & Reapers, Mikado Motor Cycles.
முகவர்கள் தேவைப்படும் இடங்கள்: பளை, சாவகச்சேரி, கைதடி, சங்கானை, தெல்லிப்பழை, மானிப்பாய், அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சுன்னாகம், நீர்வேலி, கிளிநொச்சி, மல்லாவி, மாங்குளம், முழங்காவில், ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, முள்ளியவளை, புளியங்குளம், முல்லைத்தீவு.
தொடர்புகளுக்கு: முகாமையாளர், ஜினசேன விற்பனை சேவை நிலையம், இல.174, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0772366631 / 0212220694
"Conditions Apply"

# சாவகச்சேரிக்கு வரும் நோயாளருக்கு குறைந்த கட்டணத்தில் ஓட்டோ வசதி!

## வைத்தியசாலை நலன்புரி சங்கத்தினர் ஏற்பாடு

தென்மராட்சி, ஒக்.26

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதிக் குறைந்த கட்டணத்தில் ஓட்டோ சேவையை நடத்த வைத்தியசாலை நோயாளர்கள் நலன்புரி சங்கத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நோயாளர்களிடமிருந்து ஓட்டோச் சாரதிகள் அதிக கட்டணம் அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து சங்கத்தினர் இந்த நோயாளர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் ஓட்டோ சேவையை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இந்தச் சேவையை எதிர்வரும் ஜனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தரின் அல்லது அவரது கணவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு அதற்கான சகல ஆவணங்களும் வைத்துள்ள சாரதியையும் பதிவு செய்து நோயாளர்களுக்கு முழுப் பாதுகாப்பையும் ஏற்படுத்தும் வகையில் இந்தச் சேவை நடத்தப்படவுள்ளது.

இந்த ஓட்டோ வைத்தியசாலை வளாகத்தினுள் தரித்து நின்று விடுதிகளில் தங்கியிருந்து வெளியேறும் நோயாளர்களையும் 'கிளினிக்'குகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வரும் நோயாளர்களை அவர்களது வீடுகளுக்குக் கொண்டு செல்வதற்கு நோயாளர் நலன்புரி சங்கத்தினால் விதிக்கப்படும் கட்டணத்தை அறவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை 'கிளினிக்'குகளுக்கு வரும் நோயாளர்களும் இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# ஆரியகுளத்தை மூடிப் பரவியுள்ள 'சல்பீனியா'வால் நுளம்புப் பெருக்கம்

## விரைவில் அகற்றப்படும் என்கிறார் மாநகர சபை ஆணையாளர்



யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.ஆரியகுளத்தில் 'சல்பீனியா' தாவரம் செழித்து வளர்ந்து பரவியுள்ளது. குளத்திலுள்ள தாமரைகளை விட இந்த சல்பீனியாவே எங்கும் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் குளத்தை அண்மித்த பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதாகப் பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

இது சம்பந்தமாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

சல்பீனியாவை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வார காலத்துக்குள் இந்தப் பணி முன்னெடுக்கப்படும்.

இந்தத் தாவரம் ஈரத் தன்மை கொண்டதாகக் காணப்படுவதால் அதில் நுளம்புகள் தங்கியிருக்கச் சாத்தியமுண்டு. இதனால் குடம்பிகள் மூலமாக நுளம்பு பெருகி சுற்றுச்சூழலுக்கு ஆபத்து வரலாம் எனப் பலராலும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

'சல்பீனியா' வேகமாக வளரக்கூடிய ஒன்று. இதனை மருந்து மூலம் அழிக்கலாம் எனத் திட்டமிடப்பட்ட போதும் அது குளத்தில் உள்ள ஏனைய உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது என்ற உத்தரவாதம் கிடைக்கப்பெறாததால் அந்த முறை கைவிடப்பட்டுள்ளது.

வருடாந்தம் படகு மூலம் மனித வலுவைப் பயன்படுத்தியே 'சல்பீனியா' அகற்றப்படுகின்றது. அடுத்த இரண்டு வாரங்களில் இந்தப் பணி ஆரம்பமாகும் என்றார் சரவணபவ. (ஒ-4-26)

# மழைக்கு மத்தியில் வியாபாரம்



யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்.முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளில் நேற்று செவ்வாய்க்கிழமை மழைக்கு மத்தியிலும் தீபாவளி வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை திடீரெனக் கொட்டிய மழையால் வியாபாரிகளால் நிலத்தில் கொட்டி விற்கப்பட்ட உடுபுடைவைகள் மழையில் முற்றாக நனைந்தன.

சில வியாபாரிகளின் கடைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினார்கள்.

இதேவேளை, இந்தமுறை தீபாவளி வியாபாரம் யாழ். நகரில் மாலை 6 மணியுடன் வெறிச் சோடியது. அதற்குப் பின்னர் கடைகளில் சனக் கூட்டம் இல்லை. வியாபாரிகளும் கடைகளை மூடிவிட்டுச் சென்றனர். (த-26)

# கைதடி முதியோருக்கு உடு புடைவைகள்

யாழ்ப்பாணம், ஒக்.26

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களுக்கு நேற்றுப் புதிய உடு புடைவைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாக இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கம் தெரிவித்தார்.

வருடா வருடம் தீபாவளிப் பண்டிகைக்குக் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களுக்குப் புதிய உடு புடைவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று இந்தமுறையும் அவை வழங்கப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இன்றைய தீபாவளிப் பண்டிகையை ஒட்டி மானிப்பாய் லயன்ஸ் கழகத்தால் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

முதியோர்களுக்கான இந்தப் புதிய உடுபுடைவைகளை வழங்குவதற்கு நலன் விரும்பிகள் பலர் உதவியளித்துள்ளதாக அத்தியட்சகர் கூறினார். (த-26)

# நாவற்காட்டுக்கு மின்சாரம் இல்லை; சிரமத்தின் மத்தியில் அப்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.26

வரணி, கரம்பைக்குறிச்சி கிழக்கு நாவற்காடு பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு அரச அதிபருக்குக் கடிதம் அனுப்பியும் கடந்த 2வருடங்களாக மின்சாரம் கிடைக்கப் பெறவில்லை என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தின் பொதுக் கிணற்றுக்கு அருகில் உள்ள ஊர் எல்லையில் 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

கடந்த 2 வருடங்களாக மின்சாரம் கிடைக்கப்பெறாததால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மின்சாரத்தைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# 'ஜிற்' பரீட்சைக்கு இம்முறை மாணவர்கள் முண்டியடிப்பு

## 96 வீதமானோர் தோற்றியிருந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.26

அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ். மாவட்ட மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை நடைபெற்றபொது தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கு எதிர்பார்த்ததைவிடவும் இம்முறை அதிகமான மாணவர்கள் தோற்றியுள்ளனர் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பரீட்சையைப் பொறுத்தவரையில் இம்முறை ஒரு சாதனை என்றுதான் கூற வேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் இரண்டு நிலையங்களில் நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் பிரிவு 1 இல் கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த யாழ். வலயம், தென்மராட்சி வலயம், தீவக வலயம் ஆகிய வலயங்கள் உள்ளடக்கப்பட்டு பரீட்சை நடைபெற்றது. இந்தப் பிரிவில் இம் முறை 93.5 வீதமான மாணவர்கள் தோற்றியுள்ளனர் என்று யாழ்.வலயத்திட்டமிடல் அதிகாரி எஸ். ரவீந்திரநாதன் தெரிவித்தார். இதற்கு முன்னர் சுமார் 35 முதல் 40 வீதமான மாணவர்களே தோற்றி வந்தனர். முன்னரைவிட பொதுத்தகவல் தொழில் நுட்பப்பாடம் தற்போது முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. மாணவர்களும் அதிக ஆர்வத்துடன் இந்தப் பாடத்தைக் கற்றுவருகின்றனர் என்றார் அவர்.

அதேபோன்று யாழ்ப்பாணம் பிரிவு 2இல் கோப்பாய் கோட்டம், வலிகாம வலயம், வடமராட்சி வலயம் ஆகிய வலயங்களுக்குப் பரீட்சை நடைபெற்றது. இந்தப் பிரிவில் இம்முறை 99 வீதமான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்று பிராந்திய சேகரிப்பு நிலைய உத்தியோகத்தர் ஆ.இராசேந்திரன் தெரிவித்தார்.

இந்தப்பரீட்சைப் பெறுபேறு இம்முறை தொடக்கம் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேற்றுப் படிவத்துடன் இணைத்து வெளியிடப்படவுள்ளதனால் முன்னரைவிட இம்முறை அதிக மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இந்தப்பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்னர் தகுதியான ஆசிரியர்கள் குறைவாகவே காணப்பட்டனர். தற்போது அந்த நிலை மாறிவிட்டது. தகவல் தொழில்நுட்பப்பாடத்தின் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணர்ந்துள்ளனர் என்கின்றனர் கல்வி அதிகாரிகள். (ஒ-4)

# உளநலம் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வு தொடர்பாக ஆராய்வு

வலி.வடக்கு,ஒக்.26

'உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு என்பது கனவா நிஜமா' என்னும் பொருளிலான அனுபவப் பகிர்வு யாழ்ப்பாணம் மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்கிவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை உளநலப்பிரிவு மற்றும் பருத்தித்துறை மந்திகை மாவட்ட வைத்தியசாலை உளநலப் பிரிவு என்பவற்றில் சிகிச்சை பெற்று வெளியேறியவர்களை மல்லாகம், மந்திகையில் அமைந்துள்ள 'குடில்' என்னும் இடைத்தங்கல் நிலையத்தில் தங்க வைத்து அவர்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கான ஆற்றல்களை வளர்த்து குடும்பத்துடன் இணைத்தல், அதனால் பெறப்பட்ட பலன்கள் சம்பந்தமாக இதில் விளக்கப்பட்டது.

அத்தகைய பயிற்சிகளைப் பெற்று சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்பவர்கள் மற்றும் குடும்பத்தவர்களின் அனுபவங்கள், பராமரிப்பாளர்களின் அனுபவங்கள் ஆகியனவும் இங்கு பரிமாறப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், வைத்தியகலாநிதிகள், உளநல அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், அரச ஊழியர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கருத்துரைகளைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி வி.யூட், உளநல வைத்திய நிபுணர் எஸ்.சிவயோகன், யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், கொழும்பில் இருந்து வருகை தந்த தொண்டர் சேவைகள் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் சந்திரிகா குலத்துங்க உட்பட மற்றும் பலர் வழங்கினார்கள். (த-86)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு சபையே அ.அட்டை வழங்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.26

உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அடையாள அட்டை சபையாலேயே வழங்கப்பட வேண்டும். மேலும் உள்ளூராட்சிச் சபை தீர்மானம் மூலம் மேற்படி அடையாள அட்டையை தலைவர் செயலாளர்களின் சான்றுகளுடனேயே வழங்க முடியும் என்று உள்ளூராட்சி மாகாண . சபைகள் அமைச்சு உயர் அதிகாரி தெரிவித்தார்.

பிரதேச சபை, நகர சபைகளில் தெரிவானவர்களுக்கான அடையாள அட்டை உரிய காலத்தில் வழங்குவதற்கு தலைவர் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சபைக்குத் தெரிவான உறுப்பினர்களுக்குச் சபையில் தீர்மானம் நிறைவேற்றி அதன் ஊடாக வடக்கில் உள்ள 32 சபைகளும் செயற்படலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-302)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்க 21 ஆவது ஆண்டு விழா சனியன்று

யாழ்ப்பாணம் , ஒக்.26

கொக்குவில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி இல. 47/2, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள மேற்படி சங்கத்தின் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேசசபைச்செயலாளர் மே.சாந்தசீலன், சிறப்பு விருந்தினர்களாக இ.எஸ்.பேரம்பலம் அன் கோ உரிமையாளர் இ.எஸ்.பி.நாகரத்தினம், சட்டத்தரணி செல்வி எஸ்.ஞானலோஜினி ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் மாற்று வலுவுடையோர்களால் தயாரிக்கபட்ட உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி மற்றும் விற்பனை நிலையத் திறப்பு, நிறுவனத்தின் 21 வருட சேவைகள் செயற்பாடுகள் உள்ளடங்கிய மலர் வெளியீடு, மாற்று வலுவுடை யோர்களின் போட்டிகள், கலை நிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம் பெறும் என்று வலுவிழந்தோர் சங்க நிர்வாக உதவியாளர் ஆர்.சிவயோகன் அறிவித்துள்ளார்.



ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் அவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் வித்தியாலய பழைய மாணவர்கள் கௌரவித்தனர். கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் ஆசிரியர்களுடன் நிற்கின்றனர். (ம)

# வீதி புனரமைப்பு

நாவற்குழி, ஒக்.24

கண்டி வீதியில் அரியாலையையும், செம்மணி வீதியையும் இணைக்கும் இளையதம்பி வீதி 43.4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நெல்சிப் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபை இந்த வீதியை நிர்மாணித்துள்ளது.

இந்த வீதியிலிருந்த பாலம், மதகு ஆகியனவும் புனரமைக்கப்பட்டுள்ளன. (ம-121)

# நடைபாதை வியாபாரிகளுக்கு குடிதண்ணீர் வசதி

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். முற்றவெளியில் உள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாநகராட்சி மன்றத்தால் இதற்கென தாங்கி ஒன்று இந்தப் பகுதியில் வைத்து குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை வியாபாரிகளுக்கு மலசல கூட வசதி எதுவும் இந்தப் பகுதியில் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் வியாபாரிகள் சிரமப்பட்டு வருகின்றனர். (வ-26)

# விவசாயிகளுக்கு கடன் வசதிகள்

வரணி, ஒக்.26

நெற்செய்கை பண்ணும் விவசாயிகள் வங்கி மூலம் குறைந்த வட்டிக்கு கடன் பெற விரும்புபர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு பெயர்களைப் பதியுமாறு மாசேரி விவசாய சம்மேளனம் தனது பிரதேச விவசாயிகளைக் கேட்டுள்ளது.

இது தொடர்பில் தலைவர் அல்லது பொருளாளர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது. (ச-122)

# தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் இளவாலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் மாதகலில் நேற்று முற்பகல் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் குணரத்தினம் (வயது 45) என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரதுமனைவி பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். மனைவி பாடசாலைக்குச் சென்று நண்பகல் வீடு திரும்பிய போது தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. மல்லாகம் நீதிவான் கஜநிதிபாலன் சம்பவ இடத்தில் மரண விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீதிவானின் உத்தரவுப்படி சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-4)

**அறிவித்தல்**
**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பொதுக் கூட்டம்**

கடந்த 06.10.2011 உதயன் பத்திரிகையில் மேற்படி ஆலயத்தின் பொதுக் கூட்டம் 28.10.2011 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நா.பாலச்சந்திரன் (தலைவர்), ஆலய பரிபாலன சபை. சு.சுந்தரலிங்கம் (செயலாளர்)

**தவம் போட்டோவின் தீபாவளி நல் வாழ்த்துக்கள்**

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தீபாவளி இனிய நல் வாழ்த்துக்கள்.

தவம் போட்டோ
நிர்வாகத்தினரும், ஊழியர்களும்,
167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

திரு. திருமதி செந்தூரன் - சுஜீதா தம்பதியரின் செல்வப் புதல்வி விகாசினி தனது முதலாவது பிறந்த நாளை இன்று (26.10.2011) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை நலமுடனும் வளமுடனும் பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், அம்மம்மாமார் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

"இராஜபவனம்",
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.



சி.ஒப்பிலாமணி
(அம்மப்பா).

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி விதானையார் வீதியில் 1½பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776146434

**தவறிவிட்டது**

பத்மநாதன் நிரஞ்ஜனன் என்பவரது தேசிய அடையாள அட்டை (633460884v), அலுவலக அடையாள அட்டை, HNB சேமிப்புப் புத்தகம், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, சிட்டைகள், குறிப்புப் புத்தகம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு (திரு.சிவராம் 0779789426), ஸ்ரான்லி வீதியில் உள்ள HNBயில்ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779789426

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் நகருக்கு அருகில் எரிபொருள் நிலையத்திற்கு அருகில் உள்ள செல்லாச்சி அம்மையார் வீதியில் 100 M தூரத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தினமும் பிற்பகல் 7.30 - 9.30 இடைப்பட்ட நேரத்தில் 0770711916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

**இறைச்சிக் கோழி விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (விலை 30/=ஆல் குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்பு:-மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.
T.P: 0212219292

**நாய்க்குட்டிகள் விற்பனை**

60நாள் ஆன ஒரிஜினல் பெல்ஜியம் செப் பேட் இன நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கி ஊசி போட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (புத்தகம் உண்டு)

தொடர்பு:-மல்ரி பாம் சென்ரர்,
61,இராமநாதன் வீதி, கலட்டி.
T.P:0773001763

**பெயர் மாற்றம்**

14,கரடிகுன்று நாச்சிக்குடா, கிளிநொச்சி என்ற முகவரியைச் சேர்ந்த சின்னத்தம்பி அந்தோனிப்பிள்ளை என்ற எனது பெயரினை, சின்னத்தம்பி அம்பிகை அம்பிகைதாசன் என மாற்றம் செய்து இன்று முதல் சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுகின்றேன்.

சின்னத்தம்பி அம்பிகை அம்பிகைதாசன்

**பிரத்தியேக சிங்கள வகுப்புகள்**

யாழ். உரும்பிராய் பகுதி மாணவர்கள்
அரச ஊழியர்கள் அனைவருக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்.
நான்கு மாதங்களில் இலகுவான முறையில்
சிங்களம் பேச, எழுத, வாசிக்கக் கூடியவாறு
வகுப்புக்கள் கொடுக்கப்படும்.
15-20 பேருக்கு மேற்பட்டோருக்கு அனுமதிகள் உண்டு.
உங்கள் இடத்தில் வந்து கற்பிக்கப்படும்.
அனுமதிக் கட்டணம் :- 500/=
மாதாந்தக் கட்டணம்:- 800/=
சனிக்கிழமைகளில் பி.ப 2.00 மணி - 6.00 மணி வரை
தொடர்பு :
ஆசிரியர் W.M.D.WEEVAKOON (R.D.A)
T.P. 0776571683

**காணி விற்பனைக்கு**

யாழ். முத்திரைச் சந்திக்கு அருகில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு-0772395774

**சாயிநாதன் திருமண சேவை**

20 வருட அனுபவமுள்ளவர்களினால் நடத்தப்படும் எமது ஸ்தாபனத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவம் மற்றைய குலத்தவரினதும், விவாகரத்து பெற்ற ஆண், பெண் இருபாலாரினதும் சாதகங்கள் உள்ளன.

சாயிநாதன் திருமண சேவை
இல 27, பெர்னான்டோ வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06.
T.P.0112364146
Fax: 011 -2363436
e-Mail :nathan _ met @ hotmail.com

## வியனம் கேட்டீர்களா?

# மாரி காலத்தில் வீதி புனரமைப்பு

மழைகாலம் தொடங்கிவிட்டது. மழை வந்து விட்டால் வீதிகளும் சேதமடைய ஆரம்பித்து விடும். எனவே வீதியில் பயணிப்போர் பாடு சொல்லுந்தரமன்று. தற்போது யாழ்ப்பாணத் தின் பிரதான வீதிகள் பலவும் புனரமைக்கப்படுகின்றன. இப்பிரதேசத்தில் நீண்ட காலமாக முறையாகப் புனரமைக்கப் படாதிருந்த வீதிகள் முழு அளவில் புனரமைக்கப்படுவது முக்கியமானதாகும். நெருக்கடியான போக்குவரத்து நிலைமையை மேம்படுத்தும் வகையில் வீதிகள் அகலிக்கப் பட்டு, தரமானவையாக உருவாக்கப்படுவது வரவேற்கப் பட வேண்டியதாகும்.

இந்த வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டன. பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் கொஞ்சம் அணைகட்டுவதும், பிறகு பிட்டை உண்பதும் என வேலையை இழுத்தடித்த கதையை சிறு வயதில் படித்திருக்கிறோம். இந்த வீதி அபிவிருத்தி வேலைகளும் அப்படித்தான். இங்கே சிறிதளவு வேலையைச் செய்துவிட்டு, அதை விடுத்து வேறு இடங்களில் புதிய வேலையை ஆரம்பித்து, ஒன்றுமே முடிக்கப்படாமல் இழுபடுவது போல நீள்கிறது. பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன் துறை வீதி என நாம் செல்லும் வீதிகளில் எல்லாம் இத்தகைய வேலைகள் இடம்பெறுவதைக் காணலாம்.

மழை வர வேண்டுமென மயில் காத்திருப் பது போல வீதி புனரமைப்பவர்களும் காத்திருந்தார்களோ என்னவோ! இப்போதுதான் அனேக வேலைகள் அள்ளிச் செருகிய வேகத்தில் இடம் பெறுகின்றன. சில காலமாக புழுதி மழையில் குளித்த இப்பகுதிகள் இப்போது சேற்றுத் தடாகங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. பயணிகள் பெரும் அசௌகரியங்களுடன் பயணிக்க வேண்டியுள்ளது. சுவாச நோயுள்ளவர்களுக்கு மழை சற்று ஆறுதலைத் தரும். எனது நண்பரொருவர் இவ்வளவு நாளும் புழுதியிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்கில் உட்பாதைகளால்தான் பயணித்தார். அவர் போன்றவர்களுக்கு மழை சற்று ஆறுதலளிக்கக் கூடும்.

புனரமைக்கப்படும் வீதிகளின் இரு கரைகளும் வெட்டப்பட்டுள்ளதால் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முடியாதுள்ளது. பெரியதொரு வாகனம் ஊர்ந்து ஊர்ந்து சென்றால் அதன் பின்னால் நீண்ட தூரத்துக்கு ஏனைய வாகனங்களும் ஊர்ந்து செல்ல வேண்டியே உள்ளது. இது விபத்துக்களுக்கும் வித்திடுகின்றது.

இவ்வீதிகள் வழியே இருட்டு வேளைகளில் பயணிப்போரும் பெரிதும் சிரமப்படுகின்றனர். வாகனங்கள் வீதியின் நிலையை அறிய வெளிச்சத்தைப் பிரகாசப்படுத்த வேண்டியுள்ளது. இதனால் எதிரே வருபவர்களுக்கு வீதி நிலைமைத் தெரியாமல் போகின்றது. இதுவும் விபத்துக்களுக்கு ஏதுவா கின்றது.

வீதி அபிவிருத்தி எமக்கு வரப்பிரசாதமானதுதான்.அது நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடிய காப்பெற் வீதிகளாக அமைவது சிறந்ததுதான். ஆனால் முறையான திட்டமிடலில் ஒவ்வொரு ஒவ்வொரு இடமாக நிறைவு செய்யப்படுவதே உகந்தது. மழை வருவதை அறிந்து, அதற்கு முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படுத்துவதே இன்றியமையாததாகும்.

விழிச்சான் குஞ்சு.

# மனித உரிமைகள் ஆணையாளரை நியமிக்கும் கொமன்வெல்த் யோசனைக்கு அரசு எதிர்ப்பு

கொழும்பு,ஒக்.26

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 11 நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள 'ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு மற்றும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர்' பதவியை உருவாக்குவது தொடர்பான யோசனையை பேர்த் மாநாட்டில் இலங்கை அரசு கடுமையாக எதிர்க்கவுள்ளது எனத் தெரியவருகிறது.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய உச்சிமாநாட்டில்பங்கேற்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைக் குழுவினர் அங்கு சென்றுள்ளனர்.

மூன்று நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டின் முடிவில் அடுத்த கூட்டத்தை நடத்தவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிலாட்டிடம் இருந்து பொதுநலவாய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவுள்ளார்.

இந்த மாநட்டில் 2009ஆம் ஆண்டில்போர்ட் ஒவ்ஸ்பெயினில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் முன்னாள் மலேசிய பிரதமர் தலைமையில் கானா, ஜமைக்கா, பாகிஸ்தான், உகண்டா, ஆஸ்திரேலியா, மொசாம்பிக், பிரிட்டன், கயானா, கனடா, கரிபாதி ஆகிய 11 நாடுகளின் வல்லுநர்கள் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு, மனித உரிமைகள் ஆணையாளர் பதவியை உருவாக்கும் யோசனை குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

சுதந்திரமான இந்தப் பதவியை கொமன்வெல்த் அமைப்பில் உருவாக்குவதற்கு இலங்கை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதவியை உருவாக்கும் முடிவை உடனடியாக எடுப்பதற்கு பிரிட்டன், கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-சி)



தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட டெக்னோலஜி மார்கெட்பளேஸ் எனும் கண்காட்சி கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பார்வையிடுகின்றார்.

# புதிய இரகசியம் எதையும் வெளியிடப்போவதில்லை

## விக்கிலீக்ஸ் உரிமையாளர் அசாஞ்சே முடிவு

கொழும்பு,ஒக்.26

வருமான வாய்ப்பு முடக்கப்பட்டதால் விக்கிலீக்ஸ் இணையத்தளம் புதிய இரகசியங்களை வெளியிடுவதை நிறுத்தி வைத்துள்ளது என்று அதன் உரிமையாளர் அசாஞ்சே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா அரசுகளின் இரகசியங்களை அம்பலப்படுத்தி பிரபலமானது விக்கிலீக்ஸ் இணையதளம்.

விக்கிலீக்ஸுக்கு எதிராக பல்வேறு நாடுகளில் வழக்குகள் தொடரப்பட்டதுடன், இணையத்தளத்தை முடக்கவும் அமெரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது. இதையடுத்து நிதிப் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள மாஸ்டர், விசா, வெஸ்டர்ன் யூனியன், பேபால் உள்ளிட்ட நிறுவனங்கள் சேவையை நிறுத்திக் கொண்டுள்ளன.

இது கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான செயல் என்று கூறியுள்ள அசாஞ்சே, வருமான வழிகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளதால் இணையதளத்தை நடத்த நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் கவனம் செலுத்தப் போவதாகக் கூறியுள்ளார்.

அதுவரை புதிய இரகசியங்கள் எதையும் வெளியிடப்போவதில்லை என்றும் அசாஞ்சே முடிவு செய்துள்ளார். (ச-சி)

# 'சனல் - 4' தொலைக்காட்சி நிறுவனம் ஊடக விதிமுறைகளை மீறவில்லை

## பிரிட்டன் ஊடக கட்டுப்பாட்டு நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.26

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் 'சிறிலங்காவின் கொலைக்களங்கள்' என்ற பெயரில் ஆவணத் திரைப்படமொன்றைத் தயாரித்து வெளியிட்டு உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய 'சனல்-4' தொலைக்காட்சி நிறுவனம் ஊடக விதிகளை மீறிச் செயற்படவில்லை என்று பிரிட்டன் ஊடகக் கட்டுப்பாட்டு நிறுவனம் ஒப்கொம் தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பில் 'சனல்-4' ஊடகம் வெளியிட்டிருந்த ஆவணப் படம் ஊடக ஒழுக்க விதிகளை மீறும்வகையில் அமையவில்லை என்று அந்த நாட்டு ஊடக கட்டுப்பாட்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஆவணப்படம் நேர்மையானதா, பக்கச்சார்பற்றதா, சாட்சியங்கள் பிழையாக வழி நடத்தப்பட்டனரா, போலியான தரவுகள் உள்ளடக்கப்பட்டனவா போன்ற பல்வேறு கோணங்களில் ஒப்கொம் என்ற பிரிட்டன் ஊடகக் கட்டுப்பாட்டு நிறுவனம் விசாரணைகளை நடத்தியுள்ளது.

ஆவணப்படம் அதிர்ச்சியாகவும், கோரமானதாகவும் அமைந்துள்ளது என்ற போதிலும் ஊடக விதிகளுக்கு முரணாக அமையவில்லை என்று விசாரணைகளின் பின்னர் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நேரில் கண்ட சாட்சியங்களின் நம்பகத் தன்மையை 'சனல்-4' ஆவணம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் ஒப்கொம் தெரிவித்துள்ளது.

'சனல்-4' ஊடகத்தினால் வெளியிடப்பட்ட கொலைக்களம் என்ற ஆவணப்படத்திற்கு எதிராக 118 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த ஆவணப்படத்தின் நம்பகத்தன்மை குறித்து இலங்கை அரசு பல சந்தர்ப்பங்களில் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பதிவுகளுக்கு முந்துங்கள்

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.

C,C++,Java,Java Script,VB,Html,
ஆகிய Programming Language கற்கை நெறிகள்
University of Madras Bsc பட்டதாரிகளால்
விரிவுரைகள் வழங்கப்படும்

Batch I 26.10.2011:- 9 am or 3Pm Batch III 29. 10.2011:- 11am or 3Pm
Batch II 28.10.2011:- 9 am or 3Pm Batch IV 30 .10.2011:- 11am or 3Pm

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422 , 0774907444


## மரண அறிவித்தல்

### M.S. நடராஜா

(B.Sc (Eng) Hons (Peradeniya University) C.Eng.M.I.E (SriLanka),AMI Mech.E (London) நெல்லியடி மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்)



M.S. நடராஜா 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்துரை-வள்ளியம்மை தம்பதியரின் அருமைப்புதல்வரும், லீலா அவர்களின் அருமைக் கணவரும், முகுந்தன், சஞ்சீவன், காயத்ரி ஆகியோரின் அன்புத் தந்தையும் அபிராமியின் மாமனும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கிருஸ்ணராஜா ஆகியோரின் சகோதரரும், ரஞ்சினி,ரேணுகா ஆகியோரின் மைத்துனரும் மாதுளாவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்ன உடையார் வளவு,
வதிரி,கரவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்

தோற்றம்
03
.
08
.
1932



மறைவு
26
.
09
.
2011

### அமரர் மரியாம்பிள்ளை பிலிப்பையா

கடந்த 26.09.2011 இல் மரணமடைந்த எமது குடும்ப விளக்கின் 31 ஆம் நாள் நினைவுத் திருப்பலி இன்று (26.10.2011) புதன்கிழமை காலை 6 மணிக்கு மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இவரது பிரிவால் துயருற்றிருக்கும், மனைவி பிரான்சிஸ்கா, பிள்ளைகளான காலஞ்சென்ற கிளிராசா, மற்றும் தவம் (லண்டன்) மெற்றில்டா (லண்டன்) பெற்றிசியா, லெபோன், மருமக்களான ஜெயா, சதா (லண்டன்) ராசா (லண்டன்) றஞ்சித் (யாழ்ப்பாணம்)மெரினா ஆகியோருடன் பேரப்பிள்ளைகளான மணிவண்ணன், ஆஷா, காலஞ்சென்ற றஞ்சித், மற்றும் அனுஷியா றஞ்சித் (பிரான்ஸ்) றாபிகா, றதீஸ், ஜெர்லா (லண்டன்) கீர்த்தி (லண்டன்) அலோசியோ (லண்டன்) லாறன்ஸ் (லண்டன்) லொறக்சி (லண்டன்) லக்ஷன் (லண்டன்) லக்ஸ்மன் (லண்டன்) ஜொய்ஷன், அல்ஜின், அல்ஜினா, இஷானி, அபினாஸ், ஆகியோருடன் பூட்டப்பிள்ளைகளான டினுக்ஷன், டில்ஷான், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றார்கள்.

சுனாமி மாதிரிக் கிராமம்,
மணற்காடு.

தகவல்
மனைவி - பிரான்சிஸ்கா
தொ.பே. 021 -5684028

## கைதிகளுக்கு காப்புறுதி

வரணி,ஒக்.26

சிறைக் கைதிகளுக்கான காப்புறுதித்திட்டமொன்றை புனர்வாழ்வு மற்றும் சிறைகள் சீர்திருத்த அமைச்சு அடுத்த மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தவுள்ளது.

இது குறித்து தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

சிறைக்கைதி ஒருவர் புரிந்த குற்றத்தின் அடிப்படையிலேயே இந்தக் காப்புறுதித் திட்டம் அமையும் என்றும்,அவர்களின் ஒழுக்கமும் கவனத்தில் எடுக்கப்படும்.

சிறைகள் சீர்திருத்தம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சும் தேசிய காப்புறுதி நம்பிக்கை சபையும்இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளன. சம்பளம் மற்றும் வேறு வருமானங்களை வைப்பிலிட்டு நாம் ஒரு கணக்கை ஆரம்பித்துள்ளோம். தற்போது கணக்கில் 50 லட்சம் ரூபா உள்ளது.

ஒருவர் சிறையிலிருக்கும் போது விபத்து ஏற்பட்டாலோ அல்லது வேறுஏதாவது தீங்கு ஏற்பட்டாலோ அவர் குடும்பத்துக்கு இந்தக் காப்புறுதித் திட்டம் நஷ்ட ஈடு வழங்கும். முழுமையாக சிறைத் தண்டணையை அனுபவித்துச் செல்வோருக்கு முழுக் காப்புறு தித்தொகையும் வழங்கப்படும் .

சிறையிலிருந்து மீள்வோருக்கு புதிய வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவே அமைச்சு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறது என்றார். (ச-சி)

## விளையாட்டு விழா

வரணி தென் இந்தியத் திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலைய 29 ஆம் ஆண்டு விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை தேவாலய வளாகத்தில் இடம்பெற்றது.

வண . பிதா ஏ.கே.செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வரணி மகா வித்தியாலய அதிபர் க.மங்களேஸ்வரன் கலந்து கொண்டார்

(ச-122)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்
19
*
10
*
1978



விண்ணகம்
16
*
11
*
2010

### அமரர் காராளசிங்கம் வரதன்

திதி நாள் -26.10.2011

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறுமா-எங்கள் வலி
மீண்டும் உம்முகம் காணோமா என்ற ஏக்கம்
அன்பாலும் பண்பாலும் எங்கள் மனதை
கொள்ளை கொண்ட எங்கள் அன்புச் செல்வமே
கண்மூடி திறக்குமுன் காலன் உமை அணைத்தானோ
தினந்தோறும் உம் நினைவு கண்ணீர் காவியமாகிறது
உம்பிரிவால் நிம்மதியை தொலைத்து விட்டோம்
உம் பிரிவால் வாடும்.

நீர்வேலி மேற்கு,
மாசிவன் சந்தி.

குடும்பத்தினர்

## என்றும் எங்களுடன்...... !

தரையினில்
20
*
08
*
1924



இறையுடன்
02
*
06
*
2011

### அமரர் சோமசுந்தரம் நாராயணசாமி

வல்வெட்டித்துறை

அன்புக்கு இலக்கணம் தந்து இதன் வழி எம்மைச் செலுத்தி மிகு வாஞ்சையுடன் எம்மை வளர்த்து நல்ல வாழ்வினில் எம்மை அமர்த்திச் சென்ற எமதருமை ஐயாவே நாங்கள் என்றும் தங்களுடன் - தாங்கள் எங்களுடன்

உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

எமது அன்புத் தந்தையாரின் மாஷிக சிரார்த்த நிகழ்வு நாளை [27/10/2011 ] வியாழக்கிழமை கொத்தியால் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். எமது அன்புக்குரியோர் யாவரும் எமது தந்தையாரின் ஆத்ம சாந்திக்காக அமையும் இப்புனித நிகழ்விலே கலந்து கொள்வதுடன் தொடர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்தியின் தன்மையில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து எம்மை மன நிறைவு கொள்ளச் செய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக
கப்டன் . நா.கலைநேசன்(மகன்)

# முல்லையில் புதிதாக முளை விட்டது வெலிஓயா கல்விக் கோட்டம்

முள்ளியவளை, ஒக்.26

வெலி ஓயா கல்விக் கோட்டம் புதிதாக உருவாக்கப்பட்டு அதற்கான பாடசாலைகளும் கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசால் புதிதாக உருவாக்கப்படும் உதவி அரச அதிபர் பிரிவு வெலி ஓயா ஆகும். தற்போது வெலி ஓயா கல்விக் கோட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்விக் கோட்டமானது முல்லைத்தீவு கல்வி வலயத்தினுள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாயாற்றின் மேலுள்ள பாலத்தின் அக்கரையில் இருந்து செம்மலைக் குடாவின் மேல் பகுதியாகிய குமுழமுனை, ஆறுமுகத்தான் குளம், தண்ணிமுறிப்பு தொட்டு சம்பத் நுவர வரையான பகுதியிலுள்ள பாடசாலைகள் இந்தக் கோட்டத்தினுள் அடக்கப்படுகின்றன. மொத்தமாக 7 தமிழ் பாடசாலைகளும் 6 சிங்களப் பாடசாலைகளும் இதனுள் அடங்குகின்றன. இந்தக் கோட்டத்தினுள் அடங்கும் சிங்களப் பாடசாலைகளாக ஏற்கனவே முல்லைத்தீவு வலய கரைதுறைப்பற்றுக் கோட்டத்தினுள் அடங்கும் நாயாறு சிங்கள வித்தியாலயம், சம்பத் நுவர வித்தியாலயம், எதவித் நுவேவ வித்தியாலயம், எகிது கஸ் வெவ வித்தியாலயம், கிரிபண் வெவ வித்தியாலயம், ஜனகபுர வித்தியாலயம் என்பன அடங்குகின்றன. இதில் புதிதாக அனுராதபுரம் கல்வி வலய பாடசாலைகளும் திருகோணமலை கல்வி வலயப் பாடசாலைகளுமாக 5 பாடசாலைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடசாலைகளாக கரைத் துறைபற்று கோட்டத்தில் இருந்த மு/ கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, மு/ கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை, மு/ கருநாட்டுக் கேணி அ.த.க.பாடசாலை, மு/ ஆறுமுகத்தான் குளம் அ.த.க. பாடசாலை, மு/ ஆண்டான் குளம் அ.த.க. பாடசாலை, குமுழமுனை ம.வி ஆகிய பாடசாலைகள் உள்ளடக்கப்படுகின்றன.


புதிதாகச் சேர்க்கப்படும் பாடசாலைகளில் பௌதீக வளப் பற்றாக்குறை என்பதற்கு இடமில்லை. ஆனால் எமது பாடசாலைகளுக்கு இதுபெரும் குறையாகவே இருக்கப் போகின்றது.

விடுதலைப் புலிகள் காலத்திலிருந்த மணலாறு மாவட்டம் என்ற நிர்வாக அலகு இப்போது உதவி அரச அதிபர் பிரிவாக பெயர் மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-433)

## இரு சாராரிடையே கைகலப்பு

மன்னார், ஒக்.26

மன்னார் நகரசபையைச் சேர்ந்த சுத்திகரிப்புப் பணியாளர்களுக்கும் தனியார் பேருந்துச் சேவைப் பணியாளருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பில் முடிவடைந்தது.



சிறு சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து இரு பகுதியினருமிடையே தோன்றிய முறுகல் நிலை கைகலப்பில் முடிவடைந்ததால் அந்தப் பகுதியில் சிறிதுநேரம் பதற்றம் நிலவியது.

சம்பவம் பற்றி அறிந்ததும் அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியதுடன் சுத்திகரிப்புப் பணியாளர்கள் நால்வரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். (க-601)

## செத்த பிணம் அலைகின்றது இருப்பவன் பணம் கரைகிறது

முள்ளியவளை, ஒக்.26

முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப்படாமையால் இங்கு நிகழும் மரணங்களின்போது மக்கள் பெரும் பொருள் செலவுக்கும் அலைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலை மாஞ்சோலையில் அமைந்துள்ளது. இங்கு மரணங்கள் ஏற்படுமாயின் சடலத்தைப் பரிசோதனை செய்து அறிக்கை வழங்குவதற்குச் சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இல்லை.

இதனால் மரண விசாரணைகளுக்காகவும் மரணச் சான்றிதழ் பெறுவதற்காகவும் வவுனியா அல்லது கிளிநொச்சிப் பொது வைத்தியசாலைகளுக்குச் சடலங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதனால் உறவினர்களின் போக்குவரத்து மற்றும் மலர்ச்சாலைச் செலவுக்கென 35 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவழிக்க வேண்டியுள்ளது.

எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் மீளக் குடியமர்ந்த மக்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளனர்.

இந்த நிலையில் இத்தகைய செலவுகளும் இவர்களை வாட்டியெடுப்பதை அவர்களால் தாங்க முடியவில்லை.(க-433)

## இப்படியுமொரு விற்பனை நிலையம்...



இதற்கு அடுத்தது என்ன: முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு விற்பனை நிலையமொன்று வியாபாரிகளின் வருகைக்காகக் காத்திருக்கின்றது. (433)

## சிறு வீதிகள் புனரமைப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறு வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முழங்காவில் கிராம சேவையாளர் பிரிவில் விஜி வீதி, மார்க்கண்டு வீதி என்பனவும், நல்லூரில் புளியடி விறுமர் ஆலய வீதி, பெரும்படை வீதி, ஆலங்கேணியில் சிவன் வீதி, கொல்லகுறிச்சியில் விடத்தல் பிள்ளையார் கோயில் வீதி, செல்லையாதீவு பாடசாலை வீதி, பரமன் கிராயில் பரமன்கிராய், 1 ஆம் வீதி, பரமன்கிராய் 2 ஆம் வீதி, செட்டிய குறிச்சியில் திகிரி விநாயகர் ஆலய வீதி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-406)

## தொண்டர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

நாவற்குழி, ஒக்.26

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் சிபிஆர் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 தொண்டர்களுக்கான பயிற்சி நெறி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. முதலில் 5 நாள்களும், சிலநாள் இடைவெளியின் பின்பு 3 நாள்களுமாக இந்தப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது. சமூக சேவைகள் அமைச்சு மாற்று வலுவுள்ளோரைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் இந்தச் சிபி ஆர்திட்டத்தை வன்னிப் பிரதேசத்தில் தற்போது முன்னெடுத்துள்ளது. இந்தத் திட்டத்துக்கான பயிற்சி நெறியை நடத்துவதற்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதியை அமைச்சின் அங்கவீன முற்றோர் தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எம்.டி.சி.ஜெயமானே அனுப்பி வைத்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவின் கிராமமட்டங்களில் மாற்று வலுவுள்ளோர் தொடர்பான சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்தவென 40 ஆயிரம் ரூபா நிதியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிபிஆர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான இரு கட்டப் பயிற்சியை சமூக சேவைகள் அதிகாரி ந.தசரதன், இன்னுமொரு உத்தியோகத்தர் ஆகியோர் ஏற்கனவே பெற்றுள்ளனர்.

பயிற்சி பெறும் 20 தொண்டர்களும் கிராம மட்டத்தில் மாற்று வலுவுள்ளோர் தொடர்பான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளர்.

இவர்கள் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் பிரிவுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளனர். (க-121)

## புதிய கட்டடத்தில் குடியேறவிருக்கின்றது துணுக்காய் வலயக்கல்விப் பணிமனை

அக்கராயன், ஒக்.26

துணுக்காய் கல்வி வலயப் பணிமனையின் புதிய கட்டடம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்தார்.

போரின்போது அழிவடைந்த வலயப் பணிமனையின் கட்டடங்களுக்குப் பதிலாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 10 மில்லியன் ரூபா செவில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இதனைத் திறந்து வைக்கவுள்ளார். வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் மல்லாவி மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள துணுக்காய்க் கோட்ட அலுவலகத்தில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## போட்டி முடிவுகள்

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளைக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வருமாறு:

*(நேற்றைய தொடர்ச்சி)*

தரம்-4 - கின்சிகா செல்வராசா -சோரன்பற்று சி.சி.த.க., வடிவேலு மேரிசு தர்சினி - சோரன்பற்று கணேசா வித்தி, நிந்துஷா மோகநாதன் - சோரன்பற்று சி.சி.த.க., சுவேந்தினி அருள் முருகன் - சோரன்பற்று சி.சி.த.க., ஜிவாசி நிக்ஷன் - மாசார் அ.த.க.பா, சிவகுமார் வினோதன் - சோரன்பற்று சி.சி.த.க. (க)

## பாலஸ்தாபன நிகழ்வு

முள்ளியவளை, ஒக்.26

புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பாலஸ்தாபன நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி நண்பகல் சிறப்புற நடைபெற்றது. மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த பின்னர் முதன் முறையாக இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வையொட்டி ஆலயமும், ஆலயச் சூழலும் துப்புரவு செய்யப்பட்டுப் புனிதமான நிலையில் காணப்பட்டன. அத்துடன் தெய்வ விக்கிரகங்கள் உரிய இடங்களில் நிலைநிறுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாலஸ்தாபன நிகழ்வு நடைபெற்றது.

இதில் சீருடைத் தரப்பினர் மும்முரமாகவும் முதல் ஆள்களாகவும் நின்று செயற்பட்டனர். மக்களும் பெருமளவில் கலந்து கொண்டு பூர்வாங்க சாந்திக் கிரியைகளிலும் ஈடுபட்டனர். இந்த ஆண்டுக்கான கந்தசஷ்டி வைபவம் இங்கு இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டது. (க-433)

## பற்றிக் பயிற்சி நிலையம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் தேசிய அருங்கலைகள் பேரவையினால் பற்றிக் பயிற்சி நிலையமொன்று மிக அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில், சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு இந்தப் பயிற்சிக்கான நிதியை வழங்கியுள்ளது.

கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் 22 இளம் யுவதிகள் இந்தப் பயிற்சியைப் பெறுகின்றனர். தேசிய அருங்கலைகள் பேரவையின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ரி.நிறோசன் இந்தப் பயிற்சி நெறியை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைப்புச் செய்து வருகின்றார்.(க-121)

## சிறுவர், முதியோர் தினவிழா

நாவற்குழி, ஒக்.26

மாந்தை கிழக்கு, பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவில் மிக அண்மையில் சிறுவர், முதியோர் தின விழா கொண்டாடப்பட்டது.

பிரதேச செயலர் எஸ்.குணபாலனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பிரதேசசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

முதியோர்கள் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

தொண்டு நிறுவனம் ஒன்றால் பெற்றோரை இழந்த 30 சிறுவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு பாடசாலைப் பை, தொப்பி, குடை, கொப்பிகள், பேனா, பென்சில் போன்றவை வழங்கப்பட்டன. பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வறிய முதியோர்களுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமான உதவித்திட்டங்களைத் தொடர்ந்து மேற் கொள்வதற்குரிய வழி வகைகள் பற்றியும் இந்த விழாவில் கலந்துரையாடப்பட்டது.(க-121)

# முதல் வணக்கம்



கம்பர் எழுதிய காவியம் அழகானது என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. அவர் எழுதியதை எடுத்துச் சொல்லும் விதமே ஒரு தனி அழகு.

சீதா கல்யாணம் முடிந்தது. மண மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டத்துக்கு மத்தியில் மண மேடையிலிருந்து ராமர் எழுந்து வருகிறார். அவரைத் தொடர்ந்து சீதாப்பிராட்டியும் வந்து கொண்டிக்கிறாள்.

கூட்டத்தில் இருந்தவர்கலெல்லாம் ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் இருந்தார்கள். அது என்னவென்றால் சீதையைக் கல்யாணம் புரிந்து கொண்ட ராமர் முதலில் யாரை வணங்கப் போகிறார் என் பதுதான். அதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீதை பின் தொடர ராமர் மணமண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக ராமரும் சீதையும் சென்றார்கள்.

'சரி, தசரதருக்குத் தான் முதல் நமஸ்காரம் என்று எல் லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. இவர்கள் அவரைத் தாண்டிச் செல்கிறார் கள்.

அடுத்ததாக இருந்தது கோசலை. அந்தப் பக்கமாகச் செல் வதைப் பார்த்தவர்கள் கோசலைக்குத்தான் முதல் வணக்கம் என்று நினைத்துக் கொண்டார்கள். ஏனென்றால் அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம், இதில் அன்னைதானே முதல் வருகிறது. அதனால் தாயாரைத்தான் முதலில் வணங்க வேண்டும் என்று நினைக்கிறார் போலும் என்று நினைத்தார் கள்.

ஆனால் இருவரும் அவரையும் தாண்டி அப்பால் சென் றார்கள். குருகுல வசிஷ்டர் அடுத்ததாக உட்கார்ந்து இருந் தார். குரு வணக்கம் முதலில் என்று நினைக்கிறார் போல் என்று நினைத்தார்கள் எல்லோரும். இதைப் பார்த்த விசுவாமித்திரர் கொஞ்சம் நிமிர்ந்து இருக்கிறார். அவர் களுக்கு கல்யாணம் செய்து வைத்ததே நான்தானே. அதனால் என்னிடம் தான் முதலில் ஆசீர்வாதம் வாங்குவதற்காக வரு கிறார்கள் போலும் என நினைத்தார் விஸ்வாமித்திரர்.

ஆனால் அவரும் ஏமாந்துவிட்டார். அவரையும் தாண்டி போய்கொண்டிருந்தார்கள் ராமரும் சீதையும்.

சரி அப்படி யாரைத்தான் முதலில் வணங்கப் போகிறார். தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அவர்கள் காலில் இரண்டு பேரும் விழ்ந்தார்கள். யார் அந்த அம்மா?

அதுதான் கைகேகி. ராமர் மேல் அளவு கடந்த அன்பு வைத்திருந்தவர் கைகேயி.

கம்பர் தன்னுடைய இராமாயணத்தில் இராமன் கை கேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டிருந்தார்.

அதை மட்டும் வைத்துக்கொண்டு அங்கே என்ன நடக் கிறது என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படு கிறது.

ராமன் கைகேயியைப் பார்த்து இப்படிக் கூறுவதாக இருந்ததாம். எப்படி? ''என் அவதாரத்தின் ரகசியம் உனக் குத் தெரியும். சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போக வேண்டும்; அதைக் காரணமாக வைத்து இராவணை வதம் நடக்க வேண்டும். அதனால் என் பங்கை நான் செய்து முடித்து விட்டேன். இனிமேல் உன் பங்கை நீ செய்து எங் களைக் காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற் காகத்தான் இந்த முதல் வணக்கம்.'' அப்படிக் கூறுவது போன்று இருந்ததாம்.

எழுதிய ஒரு விடயத்தை எடுத்துச் சொல்லும் விதம் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

இரண்டு நண்பர்கள் ஓர் அறையில் தங்கி சமையல் செய்து உண்டு வந்தார்கள். அதில் ஒருத்தனுக்கு சமையல் தெரியும். இன்னொருத்தனுக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. அப் போது அவனைப் பார்த்து இவன் ஒரு கேள்வி கேட்டான். ''உனக்குக் கல்யாணம் முடிந்தவுடன் முதல் நமஸ்காரம் யாருக்கு'' என்றான்.

''முதல் நமஸ்காரம் உனக்குத்தான்'' என்றான்.

''ஏன் அப்படிக் கூறுகிறாய்'' என்று கேட்டான் இவன்.

நீ சமைத்துப் போட்டதை கொஞ்ச நாளாகச் சாப்பிட்ட பின்னர் தான் சீக்கிரம் கலயாணம் செய்து கொள்ள எண்ணி னேன். நல்ல விதமாகச் சாப்பிடுவதற்காக. இந்தக் கல் யாணத்துக்கு காரணகர்த்தாவே நீதான். அதனால் உனக்குத் தான் முதல் மரியாதை என்றான்.

கோ.சுவாமிநாதன்

# சமய, அரசியல் தலைவர்களின் தீபாவளி வாழ்த்துச் செய்திகள்

## சந்தோஷ நல்வாழ்வு கிடைக்கட்டும்



இன்றைய தீபாவளி நன்னா ளில் சந்தோஷமான நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீ னம் வாழ்த்து தெரி வித்துள் ளது. ''இன்று தீபாவளித் திரு நாள். தமிழ் மக்களின் பெருநாள். புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் மகிழ்ந்து கொண் டாடும் மங்கலத் திருநாள்.'' என்று தெரிவித்துள் ளார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந் தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

எல்லாம் வல்ல தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தபெருமானின் திவ்ய திரு வருள் ஈழம் வாழ்மக்கள் அனைவருக்கும் பரி பூரணமாகக் கிடைத்து எல்லோரும் மங்கள கரமான இனிய சந்தோஷ நல்வாழ்வு வாழ வேண்டும் என்று முருகனைப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

எல்லோரும் இன்புற்றிருந்து மகிழ்ச்சியு டன் திளைத்து கந்தனின் கழல் பணிந்து எமது குருநாதர் நல்லைக் குருமணியின் பத்மபாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து மனமகிழ் வுடன் நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்- என்று அவர் மேலும் கூறினார்.

## சமாதானமும் சகோதரத்துவமும் இன்று முதல் தழைக்கட்டும்

''நாட்டு மக்களிடையே சமாதானம்,। நல் லுறவு, சகோதரத்துவம் தழைத்தோங்க இன் றைய தீபத் திருநாளில் வழி பிறக்கட்டும்''

- இவ்வாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபைத் தலைவருமான செல்லையா இராசையா விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''நரகாசுரன் என்ற அரக்கனின் ஆணவத்தை, நாராயணன் அழித்து தூய்மையடைச் செய்தது போல் இந்த நாட்டின் சிறுபான்மை சமூகங்கள் மீது இனத்துவேசம் காட்டும் இனவாத சக்தி களின் மனங்கள் தூய்மைப்படுத்தப்படவேண் டும். கடந்த மூன்று தசாப்தகாலமாக நாட்டின் போர் சூழ் நிலையால் வடக்கு கிழக்கில் பாதிக் கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வில் மறு மலர்ச்சி ஏற்பட வேண்டும்.

விதவைகள், அநாதைகள், அங்கவீனர்கள், வறுமையில் வாடும் மக்களென அல்லலுறும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் நலனுக்காகவும் அவர்கள் வாழ்வில் புதிய ஒளி வீசவும் இந்தத் தீபத்திருநாளில் நாம் பிரார்த்திப்போம்.

வடகிழக்கு தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற் கும் வடகிழக்கு இணைந்த மாநிலத்தில் சுயாட்சி எனும் அரசியல் தீர்வு கிடைக்க பெரும்பான்மை அரசியல் தலைமைகள் இணக்கப்பாடு கொண்டு தமிழினத்துக்கு ஒளி யூட்ட முன் வரவேண்டுமெனக் கோருவதுடன் அதற்கான மனப்பக்குவம் அவர்களிடம் ஏற்பட வேண்டும் எனவும் இந்த நன்னாளில் பிரார்த் திப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

## உண்மையை உணர்த்தும் தீபாவளி



உண்மையை உணர்த்தும் தீபாவளியாக இன்றைய நாள் மலர வேண்டும் என்று தெல்லிப் பழை துர்க்கா தேவி ஆலயத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்து மதம் கூறும் அர்த்த முள்ள விழாக்களில் தீபாவளி தனித்துவமானது. மக்களுக்கு இடையூறுகள் தந்த நரகாசுரன் என்ற அசுரனை கிருஷ்ணபரமாத்மா அழித்து அறம் காத்த நன்நாளே தீபாவளி. அறம் இறை வனால் ஏதோவொரு வடிவத்தில் காப்பாற்றப் படும் என்ற உண்மையை உணர்த்தும் திரு நாளே தீபாவளி.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அல்லல் நிறைந்த சுமைகளோடு திருநாள்களை அமைதியாகக் களிப்பதே வழக்கமாகிவிட்டது. மனநிம்மதியோடு விழாக்களைச் சந்திக்கும் நாள் எந்நாளோ? என்று மக்கள் காத்திருக் கிறார்கள். அன்பர்களே வழிபாட்டுக்குரிய நன் நாளில் நல்லதை எண்ணியவாறு உறவுகளை மதித்து, உணவு பரிமாறி அன்பை வளர்க்கும் நாளாக இத்திருநாளை வரவேற்போம்.

*ஆறு.திருமுருகன், தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை*

## அன்பும் அருளும் கிடைக்கட்டும்

தீபாவளித் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் எனது இனிய தமிழ் மக் களே! இத் தீபத் திருநாளில் உங்கள் அனைவ ருக்கும் இறைவனின் அன்பும் அருளும் வழி காட்டுதலும் உண்டாகட்டும் எனப் பிரார்த் தனை செய்வதோடு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று யாழ். மாநகரசபை உறுப்பினர் சுபியான் தெரிவித்துள்ளார்.

தற்போது போரற்ற சூழ்நிலை ஏற்பட்ட பொழுதிலும் நமது இயல்பு வாழ்வுமுறை நாம் எதிர்பார்க்கும் அளவுக்குத் திருப்தியான நிலைமைக்குத் திரும்பி வராவிட்டாலும் நாம் ஓரளவுக்கேனும் நிம்மதியான நிலையில் இத் தீபாவளியைக் கொண்டாடிக் கொண்டிருக் கின்றோம் என்பது மகிழ்ச்சிக்குரியதே.

இந்த நிலையில் நாம் இத் தீபாவளித் திரு நாளில் எமது சமயங்கள் கூறும் நல்ல வழி முறைகளை நமது வாழ்வில் கடைப்பிடித் தொழுகி சிறந்த சமய கலாசார பாரம்பரியங் களை மறைந்தொழிந்துபோகவிடாமல் பாது காத்து நிலைநிறுத்த உறுதிபூணுவோம் என் றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒளியின் ஆதாரமாக உள்ள இறைவன் நம் அனைவரையும் ஒளிர்விப்பாராக

இந்து மதத்தவரால் இன்று சிறப்பிக்கப் படும் தீபாவளிப் பெருவிழாவை முன்னிட்டு திருச்சபையின் வாழ்த்துக்களை வெளியிட்டு செய்தி அனுப்பியுள்ளார் திருப்பீட பல்சமய உரையாடல் அவையின் தலைவர் கர்தினால் தவ்ரான். பாப்பரசரின் சார்பில் அவர் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

''அனைத்து ஒளியின் ஆதாரமாக இருக்கும் இறைவன், அமைதியும் வளமும் நிறைந்த ஒரு வாழ்வுக்கென நம் இதயங்களையும் வீடு களையும் சமுதாயங்களையும் ஒளிர்விப்பாராக'' என அந்தச் செய்தியில் கூறியுள்ள கர்தினால், இந்த ஆண்டின் இவ்விழாவிற்கான செய்தி யாக 'மத விடுதலை' என்பது எடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளார்.

மதத்தின் அடிப்படையில் முன்சார்பு எண் ணங்கள், பகைப்பிரசாரங்கள், பாகுபாட்டுடன் நடத்தப்படல், சித்திரவதை செய்தல் போன் றவைகளுக்கு மனித சமூகம் உள்ளாக்கப்படும் நிலையில், மதம் தொடர்புடைய மோதல் களுக்கான தீர்வாக மதவிடுதலையே இருக்க முடியும் என்கிறது இந்தச் செய்தி.

மத சுதந்திரம் என்பது ஒருவர் தன் மதத்தி லிருந்து இன்னொரு மதத்துக்கு மாறிச் செல் வதையும் உள்ளடக்குகின்றது என்பதையும் இந்தச் செய்தி வலியுறுத்திக் கூறுகின்றது.

மதச் சுதந்திரம் எனபது மதிக்கப்படும் போது அது நாட்டின் வளர்ச்சிக்காக அனை வருடன் ஒன்றிணைந்து உழைப்பதற்கான ஊக்கத்தை யும் தருகிறது எனக்கூறும், திருப் பீட பல்சமய உரையாடல் அவையின் தீபாவளி வாழ்த்துச் செய்தி, இந்த மாதம் 27 ஆம் திகதி திருத் தந் தையும் அனைத்து மதப்பிரதிநிதிகளும் அசி சியில் கூடி உலக அமைதிக்காகச் செபிக்க உள் ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடம் முதல் முறை யாக வத்திக்கானில் இருந்து தீபாவளி வாழ்த்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# வங்கக் கடலில் தாழமுக்கம் தமிழகத்தில் மழை தொடரும்

## மீனவர்களுக்கு எச்சரிக்கை

தமிழகம், புதுச்சேரியில் இரண்டு நாள்களுக்கு கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலோர மாவட்டங்களில் மழை கொட்டும் என்பதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை தொடங்கிவிட்டது. இதை உறுதிப்படுத்தும்விதமாக, நேற்று தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.

இது இலங்கை முதல் ஆந்திர கடலோரம் வரை பரவியிருந்தது. இதனால் தமிழகத்தில் நேற்று மதியம் முதல் மழை பெய்யத் தொடங்கியது.

நேற்றுமுன்தினம் இரவு தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை கொட்டித் தீர்த்தது. பல இடங்களில் காற்றுடன் மழை பெய்ததால் மரங்கள் முறிந்து விழுந்தன.

பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. தீபாவளி கொண்டாட்டத்துக்கு தயாராகி வரும் மக்கள், திடீர் மழையால் பாதிக்கப்பட்டனர்.

ஜவுளி, இதர பொருட்கள் வாங்க முடியாமலும், சொந்த ஊர்களுக்கு பயணிக்க முடியாமலும் தவித்தனர்.

தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நிலை கொண்டு இருப்பதால் இன்னும் இரண்டு நாட்களுக்கு ஆந்திரா கடலோரப்பகுதியில் இருந்து இலங்கை வரை உள்ள கடல் பகுதியில் மழை பெய்யும்.

கடலோர மாவட்டங்களில் அதிக அளவில் மழை பெய்யும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.



தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் நேற்று சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை மன்றக்கூடத்தில் நடைபெற்ற மேயர் மற்றும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு விழாவில் சென்னை மாநகராட்சி மேயராக சைதை துரைசாமி பதவியேற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஜெயலலிதாவுக்கு 'தமிழ்த்தாய்' பட்டம்

சென்னை, ஒக்.26

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 'தமிழ்த்தாய்' பட்டம் அகில இந்திய குலாலர் முன்னேற்றக்கழகம் சார்பில் வழங்கப்படவுள்ளது.

இது குறித்து அந்தக் கழகத்தின் தலைவர் வி. தியாகராஜன் கூறுகையில்:

தமிழ்நாடு முழுவதும் 40 லட்சம் பேர் குலாலர்கள் உள்ளனர். நடந்து முடிந்த திருச்சி இடைத்தேர்தலிலும், உள்ளாட்சி தேர்தலிலும் அதிமுகவுக்கு ஆதரவாக வாக்குச் சேகரித்தோம். ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்த பொதுக் குழுவில் முதல்வர் ஜெயலலிதாவுக்கு 'தமிழ்த்தாய்' என்ற பட்டம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

மதுரையில் வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறும் மாநாட்டில் 'தமிழ்த்தாய்' பட்டம் வழங்கப்படும். சென்னை மேயர் சைதை துரைசாமி கல்விக்காக சேவை செய்ததை பாராட்டி கௌரவிக்கப்படும். டி. எம். சௌந்தரராஜன், ப.சுசிலா, எம்.எஸ். விஸ்வநாதன், புலமைப்பித்தன், விசு, ஆகியோரைக் கௌரவித்து கேடயம் வழங்கப்படும் - என்றார்.

# ரஹ்மானுக்கு 'மக்கள் தெரிவு' விருது



பெல்ஜியம் நாட்டில் நடந்த உலக சவுண்டு டிராக் அக்கடமி விருதுகள் 2011 நிகழ்வில் இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மானுக்கு 'மக்கள் தெரிவு' விருது கிடைத்துள்ளது.

இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மான் ஸ்லம்டாக் மில்லியனர் படத்திற்காக இரண்டு ஒஸ்கர் விருதுகள், இரண்டு கிராமி விருதுகள் வாங்கி இந்தியாவுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

'127 அவேர்ஸ்' என்ற ஹொலிவுட் படத்தில் இடம்பெறும் ஒரு பாடலுக்கு சிறப்பான முறையில் உண்மையான இசையை கம்போஸ் செய்துள்ளமைக்காக ஏ. ஆர். ரஹ்மானின் பெயர் மறுபடியும் ஓஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

ஆனால் அவருக்கு ஒஸ்கார் விருது கிடைக்காமல் போனது. இந்த நிலையில் பெல்ஜியம் நாட்டில் உலக சவுண்ட் டிராக் அக்கடமி விருதுகள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் '127 அவேர்ஸ்' படத்தில் சிறப்பாக இசையமைத்ததற்காக ஏ. ஆர்.ரஹ்மானுக்கு 'மக்கள் தெரிவு' விருது வழங்கப்பட்டது.

'127 மணித்தியால' படத்துக்காக எனக்கு விருது கிடைத்ததற்காக எனது ரசிகர்கள் மற்றும் உலக சவுண்டு டிராக் அக்கடமிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# டில்லி குண்டு வெடிப்பு உரிமை கோரியது ஹிஸ்புல் முஜாஹிதீன்

டில்லி உயர்நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு ஹிஸ்புல் முஜாஹிதீன் தீவிரவாத இயக்கம் உரிமை கோரியதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்த வழக்கில் பிரதான குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டுள்ள வாஷிம் மாலிக் தனது ஒப்புதல் வாக்கு மூலத் தில் இதனை உறுதிபடுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரான வாஷிம் மாலிக் கூறுகையில்:

டில்லி உயர் நீதிமன்ற குண்டு வெடிப்புக்கான வரைபடத்தைத் தயாரித்து, அதற்கு ஒப்புதல் அளித்தது ஹிஸ்புல் இயக்கத்தின் கொமாண்டர் சையத் சலாலுதீன் என்று கூறியுள்ளார்.

மேலும் இந்த குண்டுவெடிப்புக்கான சதித் திட்டத்தைத் தீட்டியது சலாலுதீனும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள அவரது முதல் நிலை தளபதியுமான ஜஹாங்கீர் சரூரியும் என்று மாலிக் கூறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மத்திய அமைச்சரவையில் தி.மு.கவுக்கு வெற்றிடம்

## பரிந்துரைக்கு அனுமதியில்லை

சென்னை, ஒக்26

மத்திய அமைச்சரவையில் தற்போது தங்களது கட்சி சார்பில் யாரையும் பரிந்துரைக்க வேண்டாம் என்று தி.மு.க. முடிவு செய்துள்ளது.

தி.மு.க. சார்பில் மத்திய அமைச்சரவையில் அமைச்சரவை அங்கீகாரம்பெற்ற அமைச்சர்களாக இருந்த ஆ.ராசாவும், தயாநிதி மாறனும் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிக்கிப் பதவியை ராஜினாமா செய்ய நேரிட்டது.

முன்னதாக அமைச்சரவை விரிவாக்கத்தின்போது பேசிய பிரதமர், தி.மு.க.வுக்கான அமைச்சரவை இடங்கள் அப்படியே உள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

தற்போது 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றை ஒதுக்கீடு வழக்கில் சட்டரீதியாகப் போராடுவதற்கும், கட்சியை வலுப்படுத்துவது தான் முக்கியம் என்று கட்சி தலைமை தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தற்போதைய பிரதான கவலை எல்லாம் கனிமொழிக்குப் பிணை கிடைக்க வேண்டும் என்பதுதான். எனவேதான் அமைச்சரவையில் தி.மு.க. சார்பில் வேறு யாரையும் சேர்க்க ஆர்வம் காட்டவில்லை என்று தி.மு.கவினர் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் இப்போது அமைச்சரவையில் யாரையேனும் சேர்த்தால் அது அரசியல் சந்தர்ப்பவாதம் என்று சித்திரிக்கப்படும் என்றும் தி.மு.க. தலைமை கருதுகிறது.

எனவே தி.மு.க. சார்பில் மத்திய அமைச்சரவையில் யாரும் சேர்க்கப்படமாட்டார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

(வ)

# வட்டி வீதத்தை அதிகரித்தது இந்திய மத்திய ரிசர்வ் வங்கி

## பணவீக்கம் அதிகரிப்பு

இந்தியாவில் அண்மைக் காலமாக பண வீக்கம் உயர்ந்துள்ளதால், அதை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ப மத்திய ரிசர்வ் வங்கி கடன் வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் முதன்மை வங்கியாக மத்திய ரிசர்வ் வங்கி உள்ளது. இந்த வங்கி தனது நிதிக்கொள்கையை ஒவ்வொரு அரையாண்டும் வெளியிடுவது வழக்கம். அதன்படி நேற்று அரையாண்டு நிதிக் கொள்கையை மத்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நாட்டின் விலை வாசி உயர்வு விகிதம் 9.78 சதவீதமாக இருந்தது. தற்போது உணவுப் பணவீக்கம் 10.6 சதவீதமாக உள்ளது. இதற்கு ஏற்ப கடன் வட்டி வீதங்களில் மாற்றம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 19 மாதங்களில் ரிசர்வ் வங்கி தற்போது 13 ஆவது தடவையாக கடன் வட்டி விகிதத்தில் மாற்றம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. ரிசர்வ் வங்கி நேற்று வெளியிட்ட கொள்கைக் குறிப்பில் 25 அடிப்படை புள்ளி அளவுக்கு வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் வீடு மற்றும் கார் உள்ளிட்ட வாகனங்கள் மீதான கடன் வட்டி உயரும் என்று தெரிவித்துள்ளது.

எனவே வங்கிகளில் வீடு வாங்க கடன் வாங்குபவர்கள் கூடுதல் வட்டி கொடுக்க வேண்டியிருக்கும். இது நடுத்தர மக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வீடு வாங்க ரூ.15 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை கடன் வாங்குபவர்களுக்கு அதில் ஒரு சதவீதத் தொகையை மானியமாக கொடுத்து உதவ மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு நாளை வெளியாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்திய குண்டு மீட்பு

மும்பை கடற்கரைப் பகுதியில் இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்ட சிலிண்டர் வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மும்பையின் தெற்கு கடற்கரையில் ஜெய்ஷ்9 என்ற கப்பல் போக்குவரத்து நிறுவனத் தொழிலாளர்கள் சிலர், கடலில் கால்வாய் தோண்டுவதற்காக சிறிய படகில் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது நடுக்கடலில் உலோக சிலிண்டர் வடிவிலான பொருள் இருப்பதை கண்டறிந்தனர். அதனைச் சோதித்துப் பார்த்தபோது வெடிபொருள் அடங்கிய உலோக சிலிண்டர் என்பது தெரியவந்தது.

45 கிலோ எடை கொண்ட வெடிபொருள் 21 அங்குல நீளமும் 7 அங்குல அகலமும் கொண்ட உலோக சிலிண்டரில் இருந்தது. இது குறித்து கடற் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மும்பை மஞ்சள் நுழைவாயில் பகுதி பொலிஸ் நிலைய அதிகாரி பாண்டுரங் டோகே குண்டைப் பாதுகாப்பாக மீட்டார். "கண்டெடுக்கப் பட்ட சிலிண்டர் வெடிகுண்டு பாதுகாப்பாகத் துறைமுக பொறுப்புக்கழகத்துக்கு கொண்டு வரப் பட்டுள்ளது.

அதன்பின்னர் வெடிகுண்டு செயல் இழக்கச் செய்யும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அதனைச் செயல் இழக்க வைத்தனர்" - என்றார்.

மேலும் வெடிகுண்டு செயலிழக்க செய்யும் நிபுணர்கள் கூறுகையில்: இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டாக இது இருக்க லாம் என்று கூறியுள்ளனர்.

# தெலுங்கானா பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

ஹைதராபாத், ஒக்.26

தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கக் கோரி 42 நாள்களாக நடைபெற்று வந்த போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்து தெலுங்கானாவுக்கு ஆதரவான அரசு ஊழியர்கள் நேற்று மீண்டும் பணிக்குத் திரும்பினர்.

இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுகளின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பிய கோரிக்கைகளில் 9 கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

அரசு ஊழியர்கள் நேற்று மீண்டும் தங்கள் பணியைத் தொடங்கியுள்ளனர். எனினும் இந்தப் போராட்டம் தற்காலிகமாகத்தான் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# ஊவாவில் அடை மழை இயல்பு வாழ்வு பாதிப்பு

தியத்தலாவை, ஒக். 26

ஊவா மாகாணத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிப் படைந்து வருகின்றது.

பதுளை, பண்டாரவளை, வெலிமடை, ஊவா பரணகம, பொறலந்த, குருத்தலாவை போன்ற விவசாயக் கிராமங் களிலும் பயிரிடப்பட்டுள்ள பயிரினங்கள் மழையினாலும், காற்றினாலும் அதிக சேதங் களுக்குள்ளாகியுள்ளன.

அதேவேளை, பொறலந்த, போகஹகும்புர பிரதேசத்தில் பயிரிடப்பட்ட போஞ்சிப் பயிர் கள் கடந்த சனிக்கிழமை பெய்த அடைமழை காரணமாக வெள்ளத் தால் அள்ளுண்டு போயுள்ளன. இது தவிர, பொறலந்த- கிரிந்த- தியத்தலாவை வீதிகளிலும், குருத்தலாவை- கல்லே தண்ட -தியத்தலாவை வீதி வரையி லான வீதிகளிலும் ஆங்காங்கே மண் சரிவு ஏற்பட்டு வீதியில் போக்குவரத்து செய்ய முடியா துள்ளது. (ச)



வெலிமடை, லந்தேகம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மண்சரிவு ஏற்பட்டுள்ளதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந் துள்ளது.

## அம்பாறையில் இந்துக்களின் பகுதியில் தீபாவளிப் பண்டிகை களைகட்டியது

ஆலையடிவேம்பு, ஒக்.26

அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்துக்கள் குடியிருக்கும் பிர தேசங்களில் இந்தமுறை விசேட மாகத் தீபாவளிப் பண்டிகை களை கட்டியுள்ளது. வீடுகளை அலங் கரிப்பதிலும், பண்டிகைக்கான புடவைகள், உணவுப் பொருள் களை கொள்வனவு செய்வதி லும் இந்துக்கள் ஈடுபடுகின் றனர். இதனால் அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய நகரங்களில் இரவு நேரத்திலும் கடைகளைத் திறந்துவைத்து கடந்த இரு நாள் களாக வியாபாரம் நடைபெறு கிறது.

நாட்டிலுள்ள அமைதியான சூழ்நிலையால் தென்னிலங்கை வர்த்தகர்களும் பண்டிகைக் குப் பொருத்தமான பொருள் களுடன் வாகனங்கள் மூலம் சந்திக்கு சந்தி வியாபாரம் செய்து வருகிறார்கள். தென்னிந்தியா வில் இருந்து உல்லாசப்பயணி களாக வந்த பெண்களும் புட வைகளைக் கொண்டுவந்து வீடுவீடாகச் சென்று விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்த மாவட்டத்திலுள்ள பல பொது அமைப்புகள் பண்டி கையை முன்னிட்டுப் பல கலை நிகழ்ச்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற் கானஏற்பாடுகளைச்செய்கின்றன.

வெளிநாடுகளில் வேலை செய்பவர்களும் நீண்ட காலத்திற் குப் பின்னர் சிறப்பாகக் கொண் டாடப்படவிருக்கும் இந்தப் பண்டிகைக்காக தத்தமது வீடு களுக்கு வந்துகொண்டிருக்கி றார்கள். இதனால் இந்த மாவட் டத்தில் இரவு பகலாக பஸ் போக்குவரத்துகளும் நடைபெற் றுக்கொண்டிருக்கின்றன. (ச)

## ஊவா வைத்தியசாலைகள் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

தியத்தலாவை, ஒக். 26

ஊவா மாகாண சபைக்குட் பட்ட சுகாதார திணைக்களத்திற் குட்பட்ட அணைத்து வைத்திய சாலைகள், சுகாதார மத்திய நிலையங்களையும் சீர்செய்து புனர்நிர்மானம் செய்வதற்கு ரூபா 242 லட்சத்தை ஊவா மாகாணசபை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி மூலம் மொனரா கலை, பதுளை ஆகிய மாவட்டங் களிலுள்ள ஆயுர்வேத வைத்திய சாலை, மத்திய மருந்தகம் கொண்ட ஆயுர்வேத வைத்தியசாலை, தியத்தலாவை ஆயுர்வேத வைத் தியசாலை, கஹகெஸ்வ ஆயுர் வேத மூலிகைத் தோட்டம் ஆகி யவையும் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன என்று ஊவா மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. அம்பன்வெல தெரிவித் துள்ளார். (ச)

## 4000 நஞ்சுகளிடமிருந்து தப்ப புகைத்தலைக் கைவிடுங்கள்

### கல்முனைக் கருத்தரங்கில் தெரிவிப்பு

மண்டூர், ஒக்.26

ஒருவர் புகைத்தலைக் கைவிடு வாராயின் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் 4 ஆயிரம் நச்சுப் பதார்த்தங்களிலிருந்து பாது காக்கப்படுகின்றார் என்று கல் முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி எம்.எஸ்.இப்றாலெவ்வை தெரிவித்தார்.

தனியார் மருந்தக விற்பனை யாளர்களுக்கான விழிப்புணர் வுக் கருத்தரங்கும், ஊடகவியலா ளர் சந்திப்பும் நேற்றுமுன்தினம் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனையின் கேட்போர் கூடத் தில் நடைபெற்றன. இந்தக் கூட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்த தாவது:

சிகரெட் புகைத்தல் மூலம் 4 ஆயிரம் நச்சுப் பதார்த்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத் துடன், அதில் 40 நச்சுப்பதார்த் தங்கள் புற்றுநோயை உருவாக் கக்கூடியவை. உலகத்தில் வருட மொன்றில் 6 தொடக்கம் 7 மில் லியன் பேர் புகைப்பதன் மூலம் மரணிக்கின்றனர்- என்றார்.(ச)

spectra skills இலவச வழிகாட்டல் கருத்தரங்கு
Banking (CBF / DBF)
பயிலும் பயில விரும்பும் மாணவர்களுக்கானது.
இடம்: spectra skills Hall
No.19, Stanley Road,
(Peoples' Bank 2nd Floor),
Jaffna.
Tel: 021 222 1422/1423
காலம்: 30.10.2011 (ஞாயிறு) காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை. பலவருடங்கள் அனு பவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றது.
(A/L மாணவர்களும்அனுமதிக்கப்படுவர்) 29.10.2011 சனிக் கிழமைக்கு முன்னர் உங்கள் வரவை உறுதி செய்து கொள்ளுங்கள்.

## உண்டியல் உடைத்தவர் கைது

மட்டக்களப்பு,ஒக்.26


உண்டியல் உடைத் தார் என்ற சந்தேகத் தில் அக்கரைப்பற் றைச் சேந்த ஒருவர் 3 ஆயிரத்து 600 ரூபா 50 சதத்துடன் பொலி ஸாரால் மட்டக்களப்பு நகரில் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபரை விசாரணை செய்த போது, பிச்சை யெடுத்த பணம் எனத் தெரிவித்துள்ளார். எனினும், இந்தச் சில் லறைப் பணத்தில் விபூதி, சந்தனம் ஆகிய வற்றின் மணம் காணப் படுவதாலும் அதனுள் கற்கள் காணப்படுவ தனாலும் உண்டியல் உடைத்த பணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக் கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட இவரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன் றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அருளீஸ்வரன் நர்சுதன்
(ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன், மூன்றாம் ஆண்டு)
அன்னை மடியில்
14.10.1988
ஆண்டவன் மடியில்
05.11.2010





திதி: 26.10.2011

அன்பு மகனே இனிய செல்வமே
ஆண்டு ஒன்று ஆனதைய்யா
ஆறவில்லை எம் துயரம்
ஆருயிரே நீ மறைந்த நாள் முதல்
ஆறாத் துயரில் வாடுகின்றோம்.

கடல் வடிவில் வந்த காலனவன்
கணப்பொழுதில் உன்னை அணைத்துவிட்டான்
கதியென்று உன் நிழலில் வாழ்ந்த நாம்
கதி கலங்கி வாழ்கிறோம்.

எம் கண்முன்னே நிழலாடும் உன் நினைவுகள் மட்டும்
எம்முடனே, நிழலை நிஜமாக்க நீ மீண்டும் வருவாயா?
எங்கள் கண்ணீர்க் காணிக்கையை உன்
பாதத்தில் வைத்து உன் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

எப்போதும் உன் பிரிவை நினைத்து வருந்தும்
அப்பா, அம்மா, தங்கை
மச்சான், மருமகள், உறவினர்கள்.

உரும்பிராய்,
கோப்பாய் வீதி
(சந்திக்கு அருகில்),
உரும்பிராய்.

பணிநிலை வேண்டுகை
01. கணக்குப் பதிவாளர் - (பெண்)
A/L வர்த்தக பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் 03 வருட முன் அனுபவம் இருத்தல் வேண்டும். யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்க வேண்டும்.
02. பண வசூலிப்பாளர் - (ஆண்)
03. விற்பனை உதவியாளர் - (ஆண்)
யாழ். நகர எல்லைக்குள் வதிபவராக இருக்க வேண்டும்.
04. வாகன சாரதி
கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும் (A/D)
தகைமைச் சான்றிதழ்களுடன் 02.11.2011 மு.ப. 11.00 மணிக்கு நேரில் வருகை தரவும்.
தொடர்பு: Ambikai Kalangiyam, 304, Hospital Road, Jaffna. T.P.: 021-2222511

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
துரையப்பா
பொன்னுத்துரை
தோற்றம்:
21.08.1931
மறைவு:
06.11.2010



பாசத் தடங்களிலே கால் பதித்து
எம்மைப் பக்குவமாய் வளர்த்தெடுத்து
பேசும் தெய்வமாய் எங்கள்
உயர்வுக்கு மூலமாய் நிறைந்து
எம்மை அரவணைத்த அன்பு அப்பாவே!
ஓராண்டு மறைந்த பின்னும்
எங்கள் இதயத்தில் உங்கள்
நினைவுகள் என்றும் உலாவரும்

இல. 91, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

# மறைந்த கடாபியின் பூதவுடல் இரகசிய இடத்தில் அடக்கம்



மிஸ்ரதா, ஒக். 26

சுட்டுக் கொல்லப்பட்ட லிபிய அதிபர் கடாபியின் உடல் ரகசியமான இடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்று இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

மிஸ்ரடா நகரில் உள்ள மசூதியில் வைக்கப்பட்டிருந்த கடாபியின் உடல் அழுக ஆரம்பித்ததையடுத்து பாலைவனத் தில் இரகசிய இடத்தில் ஷேக்கு கள் தலைமையில் எளிமை யாக இறுதிச்சடங்கு நடத் தப்பட்டு உடல் அடக்கம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

கடாபி கொல்லப்பட்டு 5 நாள்கள் ஆகிவிட்ட நிலையிலும் அவரது உடலை அடக்கம் செய்வதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. மிஸ்ரதா நகர மக்கள் அவரது உடலை தங்கள் நகரில் அடக்கம் செய்யக் கூடாது என எதிர்த்தார்கள். கடாபியின் சொந்த ஊரான சிர்த் நகர மக்கள் அவரது உடலை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அவர் அடக்கம் செய்யப்படும் இடம் ஒரு நினைவாலயமாக மாறி விடக்கூடும் என்ற அச்சம் இடைக்கால அரசுக்கு உள்ளதால் அந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என உறுதியாக உள்ளது. எனவே இரகசிய இடத்தில் உடலை அடக்கம் செய்ய வேண்டும் எனக் கருதியது.

இதுகுறித்து நேற்று ஆலோசனை நடத்தப்பட்டது. அதன் போது கடாபியின் உடலை பாலைவனத்தின் நடுவில் ரகசிய இடத்தில் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரது உடல் இஸ்லாமிய முறைப்படி நேற்று அடக்கம் செய்யப்பட்டது. அதில் இஸ்லாமிய மத குருக்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் தகவலை இடைக்கால அரசின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இறுதிக் கட்டப் போரின் போது கடாபியுடன் அவரது மகன் முட்டா சிம் கடாபியும் சுட்டுக் கொல்லப்பட்டார். கடாபியின் உடல் அடக்கம் செய்யப்பட்டபோது மகனது உடலும் அடக்கம் செய்யப்பட்டது. (ந)

# அமோக வெற்றியுடன் ஆர்ஜென்டீனாவில் மீண்டும் அதிபராகிறார் கிறிஸ்டினா



ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் அமோக வெற்றி பெற்று மீண்டும் அதிபராகிறார்.

ஆர்ஜென்டீனாவின் தற்போதைய அதிபர் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் டி கிர்ச்னர்(58) பெரோனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஹெர்ம்ஸ்பினர் உள்பட 5 பேர் போட்டியிட்டனர்.

தேர்தல் முடிவடைந்து பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் 53 சதவீதம் வாக்குகள் பெற்றுவெற்றியீட்டினார் இதன்மூலம் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் மீண்டும் அதிபராவது உறுதியாகிவிட்டது.

அதைத்தொடர்ந்து தொலைக்காட்சி ஊடாகத் தனது ஆதரவாளர்களிடம் பேசிய போது ஆர்ஜென்டீனாவின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பாடு படுவேன் என அவர் உறுதி அளித்தார்.

கிறிஸ்டினா பெர்னாண்டஸுக்கு முன்பு அவரது கணவர் நெஸ்டர் கிர்ச்னர் 2003ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தார். மாரடைப்பு காரணமாக அவர் திடீரென இறந்ததைத் தொடர்ந்து கிறிஸ்டினா அதியரானார். தற்போது மக்களின் அமோக ஆதரவுடன் மீண்டும் அதிபராகப் பொறுப்பு ஏற்கிறார். (ந)

## பழிவாங்கப் போவதாக கடாபியின் மகன் சூளுரை

லிபியாவின் முன்னாள் அதிபர் கடா பியின், மகன்களில் ஒருவரான சயிப்அல் இஸ்லாம், தனது தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

சிரியாவிலிருந்து ஒளிபரப்பாகும் அல்ராய் தொலைக் காட்சிக்கு நேற்றுமுன்தினம் விடுத்துள்ள, அறிவிப்பில், நான் சாகவில்லை, இன்னமும் உயிரோடு தான் இருக்கிறேன். லிபிய மக்களுக்காக இறுதி வரை போராடுவேன் சயிப் அல் இஸ்லாம் தெரி வித்துள்ளார்.

முன்னதாக, அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டதாக லிபிய புரட்சிப்படை அறிவித்திருந்தது. (ந)



லிபியா, பென்காசியில் நடந்த பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் அந்நாட்டு இடைக்காலத் தலைவர் முஸ்தபா அப்தெல் ஜலில்(நடு) தேசிய இடைக்கால கவுன்சில் படையினருடன் காணப்படுகிறார்.

## துனிசியத் தேர்தலில் மிதவாத முஸ்லிம் கட்சி வெற்றி

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த துனிசியாவின் நாடாளுமன்றத் தேர்தலில் நேற்றுப்பகல் வெளியாகிய முடிவுகளின் பிரகாரம் மிதவாத முஸ்லிம் கட்சி பெரும்பாலான வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களினால் பென் அலியின் 23 வருட கால ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் நடைபெற்ற முதலாவது ஜனநாயக ரீதியிலான தேர்தலாக இது கருதப்படுகின்றது.

217 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்காகவே இந்தத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலின் மூலம் நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ந)

# அணு ஆயுத உற்பத்தித் தடை குறித்து அமெ. - வடகொரியா ஜெனீவாவில் பேச்சு

அணு ஆயுத உற்பத்தியைத் தடைசெய்வது குறித்து ஜெனீவாவில் வடகொரியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் பேச்சு நடத்தினர். இரண்டு நாள்கள் நடந்த இந்தப் பேச்சு சுமூகமாகவே நடைபெற்றது.

வடகொரியா சார்பில் அதன் வெளியுறவுத் துறை துணையமைச்சர் கிம் கியே கிவானும், அமெரிக்கா சார்பில் ஸ்டீஃபன் போஸ்வர்த் மற்றும் கிலின் டேவிஸும் கலந்து கொண்டனர்.

2003 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற கூட்டத்தில் வட கொரியா, தென் கொரியா, அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து வடகொரியா 2005 இல் அணு ஆயுத ஒழிப்புக்குச் சம்மதித்தது. இதனையடுத்து வட கொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஏற்பட்டதுடன் 2007 இல் யாங்கியான் என்ற ஊரில் இருந்து வந்த புளூட்டோனியம் உற்பத்தியையும் வட கொரியா நிறுத்திவிட்டது.

எனினும் காலப்போக்கில் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நம்பிக்கை குறைந்து பகைமை உருவாகத் தொடங்கியது. இந்த நிலையில் 2009 ஏப்ரல் மாதம் வடகொரியா பேர்க் கூட்டத்திலிருந்து விலகியது மட்டுமல்லாது ஒரே மாதத்தில் இரண்டாவது அணு ஆயுதப் பரிசோதனையை நடத்தியதுடன் 2010 தென் கொரியத் தீவு ஒன்றின் மீது அணு ஆயுதத் தாக்குதலையும் நிகழ்த்தியது. இத்தாக்குதலை நிறுத்தி மீண்டும் பேச்சு நடத்தி வட கொரியாவின் அணு ஆயுதத் தயாரிப்பை நிறுத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

முதலில் ஆசியப் பாது காப்புக் கூட்டம் இந்தோனேஷியத் தீவின் பாலி நகரத்தில் நடந்தது. இதில் கலந்து கொண்ட வட கொரியா பின்னர் நியூ யோர்க் நகரில் அமெரிக்கா வுக்கும் வட கொரியாவுக்கும் இடையே நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சில் கலந்து கொண்டது. இதையடுத்து அடுத்த கட்டப் பேச்சுக்கும் தயாராகி வருகிறது. (ந)

## சிரியாவுக்கான அமெரிக்கத் தூதர் வெளியேறினார்

டமாஸ்கஸ் ,ஒக் 26

பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ள சூழலில், சிரியாவுக்கான அமெரிக்கத் தூதர் ராபர்ட் ஃபோட் அந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். சிரியாவுக்கான அமெரிக்கத் தூதர் ராபர்ட் போர்ட், அந்த நாட்டில் மக்கள் எழுச்சியை அடக்க, ராணுவ வன்முறையைப் பயன் படுத்தி வரும் அதிபர் பஷர் அல் அசாத்தின் செயல்களுக்குக் கடும் கண்டனம் தெ்ரிவித்து வந்தார்.

இந்த நிலையில், சமீபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அசன் அப்துல் அசீமைச் சந்திக்கத் தனது அதிகாரிகளுடன் போர்ட் சென்றிருந்தவேளை அதிபரின் ஆதரவாளர்கள் ஒன்று திரண்டு, அழுகிய முட்டைகள், உருளைக் கிழங்குகளை வீசித் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

இதையடுத்து, கடந்த 22ஆம் திகதி அமெரிக்கா அவரைத் திரும்ப அழைத்துக் கொண்டதாக, சிரிய அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். எனினும் போர்டை அமெரிக்கா அதிகாரப்பூர்வமாகத் திரும்ப அழைக்கவில்லை என அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (ந)

# கடாபி ஆதரவுப் படையினர் 53 பேரின் உடல்கள் மீட்பு

திரிபோலி,ஒக் 26

லிபியாவின் சிர்தே நகரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் 53 கடாபி ஆதரவு ராணுவத்தினரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைப்பின் பிராந்திய இயக்குநர் பீட்டர் பவ்கார்ட் தெரிவித்துள்ளார். கடாபி ராணுவம் விட்டுச்சென்ற மஹாரி மருத்துவமனையில் ஒரு வாரத்துக்கு முன்பு இத்தனைபேரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கடாபியின் பிறந்த நகரமான சிர்தேவில் பல வாரங்கள் இருதரப்பினருக்குமிடையே மோதல்கள் நிகழ்ந்தன. எட்டு மாதம் நீண்ட உள்நாட்டு போரில் இரு பிரிவினரும் கடுமையான கொடூரங்களை அரங்கேற்றியதற்கு ஆதாரம்தான் 53 உடல்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம். கடாபியின் கொலை குறித்து விசாரணை நடத்த வேண்டும் என சர்வதேச அளவிலான அழுத்தம் அதிகரித்துள்ள சூழலில் இந்தச் சம்பவம் மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

மிஸ்ராவில் கடாபி எதிர்ப் புக் குழுவினர் பிடிப்பட்ட வர்களை சித்திரவதைச்செய்து பின்னர் கொலைச் செய்துள்ளனர். அதிகமானோர் தலையில் சுடப்பட்டுக் கொல்லப்பட் டுள்ளனர். கடாபி பிடிக்கப்பட்ட இடத்திலிருந்து 96 பேர்களின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் அந்தக் கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை எனப் புரட்சிக்குழுத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். எனினும் இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர்களைச் சட்டத்தின் முன்னால் கொண்டுவர வேண்டும் என மனித உரிமைக்குழுக்கள் வலியுறுத் தியுள்ளன.

இதற்கிடையே இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலான லிபியாவில் வங்கிக்கடன்கள் மீதான வட்டியை நீக்கப்போவதாக சுதந்திரத்தை கொண்டாடும் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் உரைநிகழ்த்திய லிபிய இடைக்கால கவுன்சில் தலைவர் முஸ்தஃபா அப்துல் ஜலீல் தெரிவித்தார். (ந)

# 14 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டம் சென்ரலை வென்றது சென். ஜேம்ஸ்




சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முதலாமிடம் — யாழ்.மத்திய கல்லூரி இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலய அணி வெற்றி பெற்று யாழ். கோட்ட மட்டச் சம்பியனாகியது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்டம் ஆரம்பமாகியது முதல் முடியும் வரை எதுவித கோல்களையும் பெறவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தில் வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் குருநகர் சென். ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலய அணி 4:3 என்ற கோல்களால் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க. வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வென்றது பமிலியன்ஸ்

யாழ்ப்பாணம், ஒக்.26

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 'பி'யின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான அரையிறுதியாட்டம் ஒன்றில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 43:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

# அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.26

சர்வதேச லயன்ஸ் கழகம் 301 'பி'யின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆண்களுக்கான போட்டியில் அரையி றுதியாட்டங்கள் இன்று புதன் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின்ஒளியில் இடம்பெறவுள்ளன. அதில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி எதிர் கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம்.
* சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

பெண்களுக்கான அரையிறுதியாட்டம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளது.

இதில் கே.ஸி.ஸி.ஸி.விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

# யாழ். மத்தி, கொக்குவில் இந்து கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.26



யாழ். மத்தியகல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கானகூடைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல் லூரி கூடைப் பந்தாட்டத்தி டலில் இடம் பெற்ற ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஆகியன வெற்றி பெற் றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவிருந்தது. திருக் குடும்பக் கன்னியர்மட அணி மைதானத்துக்கு சமுகம் தரா மையால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 65:41என்ற கோல் கணக் கில் வெற்றி கொண்டது. (த-23)

# மேடையில் நியாயம் கேட்க முயன்ற அனுசாவைத் தடுத்தார் ஆளுநர்

வலி.வடக்கு, ஒக்.26

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவரும் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவருமான வீராங்கனை அனுசா வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய 'வர்ண இரவுகள்' நிகழ்வில் தனக்குப் பாராட்டு நடக்கவிருந்த மேடையில் தனது குறைகளை பகிரங்கமாகக் கூறி நீதிகேட்க முற்பட்ட வேளை அது வடமாகாண ஆளுநர் மற்றும் அதிகாரிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

கடந்த பல வருடங்களாக அனுசா தட்டெறிதல் மற்றும் குண்டெறிதல் போட்டிகளில் கலந்துகொண்டு வட மாகாணத்தின் சார்பில் வெற்றிகளை ஈட்டி வருகின்றார்.

கடந்தமாதும் அகில இலங்கை மாகாண அணிகளுக்கு இடையே இலங்கை விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில் வடமாகாணத்தின் சார்பில் தனிப்பட்ட ஒரு நிகழ்வில் பதக்கம் வென்று வடமாகாணத்துக்குப் பெயர் சேர்த்த பெருமை இவரையே சாரும்.

இந்த நிலையில் தனது மனக்குறையை உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதிலும் உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுக்கவில்லையென்ற நிலையில் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்கு இதனை நேரடியாகக் கொண்டுவரும் ஒரு சந்தர்ப்பமாக வர்ண இரவுகளைப் பயன்படுத்தி நீதி கேட்கமுற்பட்டார்.

ஆனால் அங்கும் அதற்கு உரிய சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் அவர் மனம் உடைந்து காணப்படுகிறார்.

குறிப்பிட்ட வீராங்கனையின் ஆதங்கத்தை வடமாகாண ஆளுநர் சபையில் கேட்க விரும்பாவிட்டாலும் தனிமையாக அழைத்தேனும் கேட்டிருக்கலாம் எனச் சபையில் இருந்த கல்வியாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

எதிர் காலத்திலேனும் இந்த வீராங்கனையை உரிய அதிகாரிகள் தனிமையில் அழைத்து உரிய நடவடிக்கையெடுக்க வேண்டியது அவர்களின் கடமையும் பொறுப்பும் என விளையாட்டு வீர வீராங்கனைகளும் தெரிவிக்கின்றார்கள். (த-86)

# 3 பிரிவுகளில் ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.26

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையிலான சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் மூன்று பிரிவுகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் ஒரு பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23-86)

# சமநிலையில் முடிந்த ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.26

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 14, 16, 19, 20 வயதுப் பிரிவுகளுக்கு இடையிலான நட்புரீதியான உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# சாதனையாளர்கள் ஏமாற்றம்

வலி.வடக்கு, ஒக்.26

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய 'வர்ண இரவு' நிகழ்வில் பரிசுகள், பாராட்டுதல்கள் வாங்க வந்திருந்த வடமாகாண விளையாட்டுச் சாதனை யாளர்கள் இருபது பேர் ஏமாற்றத்துடன் திரும்பிய சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் மாகாண மட்டத்தில் சாதனை புரிந்த வீரர்கள், வீராங்கனைகளைக் கௌரவிப்பதற்காக அழைத்து இருந்தது. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என வட மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் இருந்து வருகை தந்து பரிசுகள் வாங்குவதற்காக பல மணித்தியாலங்கள் காத்திருந்தார்கள் வீரர்கள்.

நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருந்த நிலையில் இவர்களுக்கான பணம் உட்பட சான்றிதழ்கள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போதிலும் உரியவர்களின் பெயர்கள் அழைக்கப்படாமலே நிகழ்வுகள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மேடையில் விளையாட்டு வீராங்கனை அனுசா நீதி கேட்க முயன்ற சம்பவத்தால் உரிய அதிகாரிகள் குழப்பமடைந் தமையால் இந்த நிகழ்வை நடத்த தவறியதாகவும் தெரியவருகின்றது.

2010 ஆம் ஆண்டு 17 வீர, வீராங்கனைகளும், 2011 ஆம் ஆண்டு 03 வீராங் கனைகளும் வடமாகாண சாதனையாளர்களாக இனம் காணப்பட்டு அழைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

(த-86)

# இறுதி ஆட்டமும் இந்தியாவுக்கே!

இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான இறுதி ஒரு நாள் ஆட்டத்திலும் இந்திய அணி 95 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று ஒரு நாள் தொடரை 5 - 0 என்ற கணக்கில் கைப் பற்றியுள்ளது. இங்கிலாந்து அணி வெற்றி பெறும் நிலையில் ஒரு கட்டத்தில் இருந்தாலும் இந்தியாவின் சுழற்பந்து வீச்சில் சிக்கி இறுதியில் தோல்வியை தழுவியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து இங்கிலாந்து அணி விளையாடி வருகின்றது. இதில் முதலில் 5 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடியது. முதலில் இடம்பெற்ற 4 ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில் இறுதி ஆட்டத்தில் ஆறுதல் வெற்றி பெறும் நிலையில் இங்கிலாந்து அணி களமிறங்கியது. கொல்கத்தாவில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீரமானித்தது.




முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக்காக 80 ஓட்டங்கள் பகிரப்பட்டது. கம்பீர் 38 ஓட்டங்களுடன் பின்னின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ஹோக்லி ஓட்டமெதனையும் பெறாத நிலையில் அதே பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அடுத்த பந்து பரிமாற்றத்திலேயே ரஹானே 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர் ஆட்டமிழப்புக்களால் இந்திய அணி சற்றுத் தடுமாறியது.

மத்திய வரிசையில் ரெய்னா 38 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் டோனி 69 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இறுதி யில் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் சமிட் பட்டேல் 3, பின் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு மிகச் சிறப்பான ஆரம்பத்தை கீஸ்வெஸ்டர், அணித் தலைவர் குக் வழங்கினர். இந்திய அணிக்கு தலையிடி கொடுக்கும் வகையில் இந்த ஜோடியின் துடுப்பாட்டம் அமைந்தது. முதலாவது இலக்குக்காக 97 பந்துகளில் 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 20.2 பந்து பரிமாற்றங்களில் 129 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அரனின் பந்து வீச்சில் குக் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 134 ஓட்டங்களை இங்கிலாந்து பெற்ற நிலையில் ஜடேஜாவின் பந்து வீச்சில் கீஸ்வெஸ்டர் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரோரட் 5, பெல் 2, போப்ரா 4, பெயார்ஸ்ரோ 2, பிறஸ்னன் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். சமிட் பட்டேல் 18, சுவான் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 37 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 95 ஓட்டங்களால் இங்கிலாந்து தோல்வியடைந்தது. பந்து வீச்சில் ஜடேஜா 4, அஸ்வின் 3 இலக்குகளையும் கைப் பற்றி இந்தியாவின் வெற்றியை உறுதி செய்தனர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் ஜடேஜாவும் தொடர் ஆட்டநாயகனாக இந்தியாவின் அணித்தலைவர் டோனியும் தெரிவானார்கள். (15)



**இங்கிலாந்து அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான இறுதி ஒரு நாள் ஆட்டத்திலும் இந்திய அணி 95 ஓட் டங்களால் அபார வெற்றி பெற்று ஒரு நாள் தொடரை 5 - 0 என்ற கணக்கில் கைப் பற்றியுள்ளது.**


# சாதிப்பாரா சாய்னா நேவல்

பிரெஞ்ச் ஓபன் பட்மின்ரன் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதில் பட்டம் வெல்ல இந்திய வீராங்கனை சாய்னா நேவல் காத்திருக்கிறார்.



பிரெஞ்ச் ஓபன் பட்மின்ரன் தொடர் இன்று பிரான்ஸின் பரிஸ் நகரில் தொடங்குகிறது. இதில் சாய்னாவும் பங்கேற்கிறார். முதல் போட்டியில் ஹொலன்டின் ஜியாயாவை சந்திக்கிறார். சிங்கப்பூர் ஓபன், இந்தோனேசியா, ஹொங் கொங், இந்தியன் ஓபன் கிராண்ட் பிரிக்ஸ் தொடர்களில் சாதித்த சாய்னா, சமீபத்தில் நடந்த டென்மார்க் ஓபன் தொடரில் இரண்டாம் சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வியடைந்தார். இதற்கு இந்த முறை தக்க பதிலடி கொடுப் பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் காய்சப், கொரியாவின் வான் கோ சோனை எதிர்கொள்கிறார். பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் ஜுவாலா கட்டா, அஷ் வினி ஜோடி, கொரியாவின் குயங் யங், ஹா நா ஜோடியை எதிர்கொள்கிறது. கலப்பு இரட்டையர் பிரிவில் ஜுவாலா, திஜு ஜோடி, இந்தோனேசியாவின் டோன் டோவி, லியானா நட்சர் ஜோடியை சந்திக்க உள்ளது. அஜய் ஜெய்ராம், சேட்டன் ஆனந்த ஆகியோர் இன்று நடக்கும் தகுதிச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் பட்சத்தில், பிரதான சுற்றுக்கு வாய்ப்பு பெறுவார்கள். (15)



# மேற்கிந்தியத் தீவுகளை மி(வி)ரட்டிய பங்களாதேஷ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கும், பங்களாதேஷுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இருப்பினும் பங்களாதேஷ் அணி அபாரமாக ஆடி மேற்கிந்தியத்தீவுகளை திணறடித்தது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் பங்கேற்கின்றது. இதனடிப்படையில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 21 ஆம் திகதி சிட்டஹொங்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 9 இலக்குகளை இழந்து 350 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது துடுப்பாட்டத்தை இடைநிறுத்தியது. பங்களாதேஷ் சார்பில் அணித்தலைவர் முஷபகுர் ரகீம் 68, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரமிம் இக்பால் 52, ரகிபுல் ஹசன் 41, சகிப் அல் ஹசன் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் அணி 255 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்திருந்தது. பின்னர் மழை காரணமாக இரண்டாம், மூன்றாம் நாள் ஆட்டங்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் பிஷு 3 இலக்குகளையும், எட்வேட்ஸ், சாமுவேல்ஸ் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, பங்களாதேஷின் அறிமுக வீரர் சன்னியின் சிறப்பான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 244 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் சமி 58, சந்தர்போல் 49 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் சன்னி 6 இலக்குகளையும், சகிப் அல் ஹசன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் 106 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 119 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் நவீஸ் 50, இக்பால் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு 226 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய இறுதி நாள் ஆட்ட நேர முடிவு வரை 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிம்மன்ஸ் 44 ஓட்டங்களை அதிகப்படியாகப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சன்னி, சகிப் அல் ஹசன் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சன்னி தெரிவு செய்யப்பட்டார். (15)

# தீபாவளித் திருநாளில் சமாதானச் செய்தியும் நல்லெண்ண ஒளியும் மக்கள் வாழ்வில் ஏற்படட்டும்!

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து



தீயவற்றை நீக்கி நன்மையையும், அறியாமையை நீக்கி அறிவுடைமையையும், இருளை நீக்கி ஒளியையும் வெற்றிகொள்வது மனித வாழ்வின் முடிவில்லாத தேடலாகும்.

இந்து சமயத்தின் உயர்ந்த ஆன்மிகப் பெறுமானங்களுக்கேற்ப ஒரு சிறந்த வாழ்க்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் உறுதியான போராட்டத்தின் முன்னேற்றத்தை அடையாளப்படுத்தி நிற்கின்றது என்றவகையில் மக்களின் ஆன்மிக சுபீட்சத்தை வெளிப்படுத்தி நிற்கும் தீபத் திருநாளே தீபாவளிப் பண்டிகையாகும்.

-இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

தீபாவளித் திருநாளின் சமாதானச் செய்தியும் நல்லெண்ண ஒளியும் எமது மக்கள் வாழ்வில் மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் வழி வகுக்கின்ற இனிய திருநாளாய் அமையப் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கைவாழ் இந்து மக்களுக்கு எனது இனிய தீபாவளி வாழ்த்துக்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-சி)

# குரோதம் ஒழிந்து சகவாழ்வு மலர வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க



கோபம், குரோதம் என்பவற்றை மறந்து சகோதரத்துவம், சக வாழ்வு என்பன இந்தத் திருநாளில் மலர வேண்டும்.

மனிதாபிமானம் உயர்ந்து-சமாதானம் மலர்ந்து-தன்னல நோக்கத்தை மறந்து-மற்றவர்களின் நன்மைகளுக்கு இந்நாளில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை தீபத் திருநாள் எடுத்துக்கூறுகிறது.

மனதில் உள்ள இருள் நீங்கும்வரை எந்த நன்மைகளும் எதிர்பார்க்க முடியாது. இந்த தீபத்திருநாளில் இம்மாதிரியான இருள் சூழ்ந்த மனதில் ஒளி வீச வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் அனைத்து இந்துக்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-சி)

# தளபதி ஹத்துருசிங்க தீபாவளி வாழ்த்து



யாழ்ப்பாணம், ஒக்.26

தீயவைகள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டா என்பதை நினைவுறுத்தும் தீபத்திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் யாழ். படைத்தரப்பு சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில்:

இன்று உலக வாழ். மக்களுடன் நீங்களும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்தத் தீபாவளி தினத்திலே யாழ். கட்டளைத் தளபதியான நானும் அதிகாரிகள் மற்றும் இராணுவ வீரர்கள் ஆகியோரும் உங்களோடு இணைந்துகொள்வதில் மிக மகிழ்ச்சி அடைகின்றோம்.

அசுரனை அழித்த இந்த நாள் நல்லவைகள் மூலம் எல்லாவிதமான தீமைகளும் அழிக்கப்படும் அத்துடன் தீயவைகள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டா என்பதை எமக்கு ஞாபகப்படுத்துகிறது. இலங்கை மக்களான நாம் கடந்த காலங்களில் அதனை நன்றாக அனுபவித்தோம்.

அந்த இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்து செளபாக்கியத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் யாழ். மக்களுக்காக தொடர்ந்தும் சமூக சேவைகளை மேற்கொள்வது யாழ். கட்டளைத் தலைமையகத்தின் குறிக்கோளாகும் என்பதை அதன் கட்டளைத் தளபதி என்ற ரீதியில் இந்த நாளில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்! (ஓ-10)

# செளபாக்கியம் மிக்க தேசத்தைக் கட்டியெழுப்புவோம்



உலகத்தில் வாழும் இந்துமத பக்தர்கள் பக்தியுடன் கொண்டாடும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு ஆசிச் செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். - என்று பிரதமர் ஜயரட்ன தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

இந்துக்களின் ஆன்மிக மீட்சியாளராகக் கருதப்படும் கிருஷ்ணபகவானுக்கு நன்றி செலுத்துமுகமாக ஆண்டுதோறும் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகிறது. அதர்மம் ஒழிக்கப்பட்டு தர்மம் நிலைநாட்டப்படும் என்பது இதன் பிரதான கருப்பொருளாகக் கொள்ளப்படுகின்றது.

'நரகாசுரன்' என்ற அரக்கனின் பிடியில் சிக்கியிருந்த இந்துமத பக்தர்களை அந்தப் பிடியில் இருந்து விடுவித்துப் பாதுகாத்தவர் கிருஷ்ணபகவான். இலங்கையிலுள்ள எந்தவொரு சமய விழாவையும் கொண்டாட முடியாத இருண்ட யுகத்தை முடித்துவைத்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அதர்மம் ஒழிக்கப்பட்டு, தர்மம் நிலைநாட்டப்பட்டிருக்கும் தேசத்தை செளபாக்கியமிக்கதோர் தேசமாக மாற்றும் பணியை முன்னெடுத்துச் செல்பவர்களில் ஒருவராகுங்கள். அப்போதுதான் பிறப்பில் இந்துமத பக்தரான நீங்கள் உண்மையிலேயே கிருஷ்ணபகவானைப் பின்பற்றுபவர்களாக ஆகுவீர்கள். உங்கள் அனைவருக்கும் இனிய தீபாவளித்திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்! - என்றுள்ளது.

முதன் முதலாக யாழ் மண்ணில் ஆரம்பம்

Travel & Tourism, Media & Tourism

கற்கை நெறிகள்

*Certificate Course in Travels & Tourism - 6 months*

*Diploma Course in Travels & Tourism - 1 Year*

*Certificate Course in Media & Tourism*

O/L, A/L. முடித்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிவோர் (Tourist's Hotel, Tourist's Site, Tourism Organizing Company, Travel agency) வெளிநாடு செல்ல இருப்பவர்கள் போன்றோரிற்கான கற்கை நெறிகள்.

விண்ணப்ப படிவங்களை 27/10/2011 இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

Nation Popular Travels & Tours
No,82 Brown Road
Jaffna.
Tel: 0214 920 920 Mobil: 0772175969

எந் நாட்டிலும் இத்துறைகளில் மிளிரலாம்... ஸ்ரான்லி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக

# வாழ்த்துகின்றோம்



யா / பருத்தித்துறை சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை மாணவி செல்வி அல்டன் பிரியதர்ஷா இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகள் என்ற சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார். அவரை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் உறவினர்கள் மனமகிழ்வுடன் கல்வியில் மென்மேலும் சிறந்தோங்க வாழ்த்துகின்றனர்.



யா / சென் தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை மாணவி செல்வி சகாயசேவியர் சில்வியா இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகள் என்ற சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார். அவரை அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, அம்மம்மா, மாமிமார், மாமன்மார், அன்ரிமார், பெரியப்பா, மச்சான்மார் மற்றும் மச்சாள்மார் பல்லாண்டு காலம் கலைகள் பல பயின்று பட்டங்கள் பெற உறவினர் நாம் வாழ்த்துகின்றோம்.

இம் மாணவச் செல்வங்கள் தொடர்ந்தும் சாதனைகளைப் படைக்க "சுடர் ஒளி" கல்விச்சுடரும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

விற்பனைக்கு

கையடக்கத் தொலைபேசிகள்
1. Black Berry-8310
2. Lgke - 970 விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 0776657771

REPAIRING

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) Monitor (LCD & CRT) UPS, Power Supply, Scanner, Printer, Cartridge Refill, Woofer, iPod, MP-4 Player, Digital Camera, Television (LCD & CRT) DVD Player, Satellite Receiver, என்பன குறித்த தவணையில், உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். (உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்)

NORTH LEAD
COMPUTER SALES AND SERVICE CENTER
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0774192275, Fax : 222 4460

சிங்கள வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.

NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

ENGLISH CLASSES

STUDENT VISA வில் வெளிநாடு செல்பவர்கள், SPONSOR மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கான IELTS, AI, BI, B2 ETC.. வகுப்புக்களும், பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கில மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான Spoken English, Business English etc.. புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். தனிப்பட்ட, குழு வகுப்புகளாக நடைபெறுகின்றன.

NORTH LEAD EDUCATIONAL CENTER
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

கணனி வகுப்புகள்

Visual Basic, VB.net, C, C#, C++, Java, PHP, SQL, Web & Graphic Designing, Ms.Office, Tally, DTP, Internet & E-mail, etc... அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால், பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பித்துக்கொடுக்கப்படும்.

NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 * 10 * 1952

மறைவு
26 * 10 * 2010




அமரர் பிரகாசம் அன்ரனி

ஆண்டொன்று ஆனதுவோ?
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் எம்மிடத்தில் தோன்றிட...
வேண்டும் வரம் வேண்டி ஏங்குகின்றோம்.
உம் பிரிவால் துயருறும்

22, பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அன்புத் தங்கை
ஜெகதீசர் -கில்டா- குடும்பம்.

# MEMORY OF



**LATE MR.RAVI ATHULATHMUDALI**

(Asst. .Gen .Manager-Investment)

**The Finance Co. - PLC.**

Our heartfelt condolences to the grieving family Members of our beloved late

**Mr. RAVI ATHULATHMUDALI**

and pray for the peace of his soul.

**Manager & Staff**

**The Finance Co. - PLC,**
**Jaffna/Nelliyady/Chavakachcheri.**

# இலங்கையைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர் தருஸ்மன் குழு கடாபி கொலையை விசாரிக்க வேண்டும்

## சர்வதேச சமூகத்தைச் சாடுகிறார் பிரதமர் ஜயரத்ன

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய முன்னர் லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியின் கொலை தொடர்பாக விசாரணை செய்ய தருஸ்மன் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கேணல் கடாபி எவ்வாறு கொல்லப்பட்டார் என்பது தொடர்பாக இதுவரை வெளியிடப்படாத நிலையில், ஏன் அது பற்றிய தகவல் வெளியிட இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சர்வதேசத்திடம் நான் கேட்க விரும்புகின்றேன்.

மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச சமூகங்கள், எம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை வெற்றிகொள்ள நாட்டு மக்கள் அனைவரும் வேறுபாடு பாராது ஒன்றிணையவேண்டும்.

30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தபூமியில் வாழும் எந்தவொரு பிரிவினருக்கு எதிராக எச்சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை.

குறிப்பாக, இந்த நாட்டை ஆட்சிசெய்த தலைவர்களும் அப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்துச்சொல்லவில்லை. சிங்களம், தமிழ், முஸ்லிம், மலை, பறங்கியர் ஆகிய அனைத்து இனத்தவர்களும் இந்நாட்டில் புரிந்துணர்வுடன் வாழ்கின்றமை முழு உலகுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த இன ஒற்றுமையை சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதே சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தை வென்றுள்ள நாம் பொருளாதாரச் சவாலை சந்தித்துள்ளோம். இதை எதிர்கொள்வது என்பது இலகுவான விடயமல்ல. சிறந்த அனுபவமுள்ளவர்கள் எம்மில் உள்ளனர். அவர்களின் ஆலோசனையின்படி நாங்கள் முன்னோக்கிச் செல்வோம்.

60 வயதை எட்டியதுடன் வேலை செய்ய முடியாது எனச் சிலர் கூறுகின்றனர். அப்படியல்ல. அந்த வயதுதான் நிதானமான, சரியான தீர்மானங்களை எடுக்கும் வயதாகும். இதில் எனக்கும் அனுபவமுள்ளது - என்று கூறினார் பிரதமர்.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அரச நிர்வாக அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# சுதந்திர வாழ்வு மலரட்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் சரவணபவன் எம்.பி



யாழ்ப்பாணம், ஒக்.26

பல தசாப்தங்களாக அடக்குமுறைகளுக்கும் அராஜகங்களுக்கும் மத்தியில் வாழ்ந்துவரும் எம் மக்களுக்கு இனியாவது சுபிட்சமான, சுதந்திரமான வாழ்வு மலர வேண்டும் என்று இன்றைய தீபாவளித் திருநாளில் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

யுத்தம் ஒய்ந்து விட்டது, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது, நாட்டில் இன செளஜன்யம் நிலவுகிறது என்று அரச தரப்பு பீற்றி வருகிறது. ஆனால் உண்மை நிலையோ தலைகீழாகவுள்ளது.

போர்ச்சூழல் இருந்ததை விடவும் தற்போது தமிழர்கள் அடக்கி ஆளப்படுகின்றனர். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டதாக உலகத்துக்குப் பறைசாற்றிக்கொண்டு, எம் மக்களை பல்வேறு வடிவங்களில் மோசமாகவதைத்து வருகிறது சிங்களப் பேரினவாதம்.

நீண்ட பல வருடங்களாக அரசியல் கைதிகளாக தமிழ்ச் சகோதரர்கள் சிறைகளில் வாடி வருகின்றனர். அவர்களுக்கு இது வரையிலும் விடிவு இல்லை. விடுதலைக்காகப் போராடிய எம் இளைஞர்கள் ஏராளமானோர் இன்னும் சிறைக் கூண்டில் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

அதேசமயம் தமிழரின் தாயகம் நாளாந்தம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் இருந்து எம் மக்களுக்கு கூடிய விரைவில் சமாதான வாழ்வும், சுதந்திரமும் கிடைக்க இன்றைய நன்னாளில் இறை ஆசி வேண்டிநிற்கிறேன் - என்றுள்ளது. (ஒ)

### போர்க்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்கவேண்டிவருமெனவும் கனடா எச்சரித்திருந்தது.

எவ்வாறாயினும், போர்க்குற்றச்சாட்டுகளை முற்றுமுழுதாக நிராகரிக்கும் இலங்கை அரசு, 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பு இந்த விவகாரத்தினால் பிளவுபட்டுவிடும் அபாயம் இருப்பதாகவும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு எதிராகப் போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தி தமது நாட்டில் தீவிர அழுத்தங்கள் வந்துள்ள நிலையில் ஆஸ்திரேலிய பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஒ-சி)

### மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள் மீது நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கான நீதியைதான் எதிர்பார்ப்பதாக ஜெகதீஸ்வரன் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மெல்போர்ன் நீதிவான் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு நவம்பர் 29 ஆம் திகதி விசாரிக்கப்படவுள்ளதாக ஜெகதீஸ்வரனின் சட்டத்தரணி ரொப் ஸ்ட்றே கூறியுள்ளார்.

63 வயதான ஜெகதீஸ்வரன் 1987 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார். 3 வருடங்களின் பின் அவர் அந்நாட்டுப் பிரஜையானார்.

இதேவேளை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதான போர்க் குற்றச்சாட்டு வழக்கை விசாரிக்க முடியாது என்று அவுஸ்திரேலிய சமஷ்டி சட்டமா அதிபர் ரொபேர்ட் மக்லலண்ட் மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் ஆகியோர் மறுத்துள்ளனர்.

இந்த வழக்கு முன்னெடுக்கப்பட அனுமதித்தால் ராஜதந்திர தலைவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற சர்வதேச சட்டத்தை மீறுவதாக அமையும் என ஆஸ்திரேலிய சமஷ்டி சட்டமா அதிபரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் அனுமதியின்றி இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக ஆஸ்திரேலிய நீதிமன்றில் போர்க்குற்ற வழக்குத் தொடர முடியாது என ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையின்றி எதுவும் செய்ய முடியாதென ஆஸ்திரேலிய ஏபிசி வானொலிக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபருக்கு இந்தவழக்குத் தொடர்பில் எதுவும் அறிவிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்,

எனினும் இதுகுறித்து சட்டமா அதிபர் ரொபட் மிக்லேண்டின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜெகதீஸ்வரனின் வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

இருந்த போதும் இந்த வழக்கு குறித்த எந்த ஆவணமும் தமக்குக் கிடைக்கவில்லை என சட்டமா அதிபர் ரொபட் மிக்லேண்டின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு வழக்கு கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ 10)

### 4 நாடுகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுமன்ற உறுப்பினர் ஜோர்ஸ் பொல்ரஸ் தலைமைவகிப்பர்.

இந்தக் குழுவினர் நாளை மு.ப. 10 மணியளவில் பலாலி விமான நிலையத்தை வந்தடையவுள்ளனர். பின்னர் முற்பகல் 11 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். அதன்பின்பு சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

மதியத்துக்குப் பின்னர் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள், புனர்வாழ்வளிக்கப்படும் நிலையங்கள், வீடமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இடங்கள் போன்ற பகுதிகளுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-15)

### மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புப் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக நியமிக்கப்பட்ட 11 நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு தனது 106 பக்கப் பரிந்துரையை வழங்கி உள்ளது.

இந்தியா அதில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொண்டாலும் உறுப்பு நாடுகளைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆணையாளர் ஒருவரை (ஐ.நா. போன்று) நியமிப்பது என்ற பரிந்துரையை ஏற்கத் தயாராக இல்லை.

இந்தப் பரிந்துரையைப் பயன்படுத்தி இலங்கையை வீழ்த்த மேற்குலக நாடுகள் முயலக்கூடும் என்று இந்தியா அஞ்சுகிறது. (உ)

### மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் மாணவர் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாத குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அத்துடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவரும் இனந்தெரியாத குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைநெறி மாணவர்களுக்கும், கலைப்பீட மாணவர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மோதலானது ஓர் அரசியல் விடயமொன்றின் கலந்துரையாடலின் விளைவால் ஏற்பட்டதாகும்.

இவற்றை ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது உரிமைகளுக்காகப் போராடும் பல்கலைக்கழக மாணவர்களை அடக்கி ஆளும் அராஜக நடவடிக்கையை அரசு ஆரம்பித்திருக்கின்றமை ஊர்ஜிதமாகின்றது.

மாணவர்கள் மீது குண்டர்களை ஏவிவிட்டுத் தாக்குதல் மேற்கொள்வதன்மூலம் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என்ற குறுகிய எதிர்பார்ப்புடன் அரசு உள்ளது. அரசின் எதிர்பார்ப்பு முட்டாள்தனமாகும்.

இந்த எதிர்பார்ப்பை அடைந்து கொள்வதற்காக பல்கலைக்கழக மாணவர்களில் அரசுக்கு ஆதரவாக உள்ள சிலரை தன்வசம் ஈர்த்துக்கொண்டு அவர்கள் ஊடாக மாணவர்களிடையேயுள்ள ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

இதன் வெளிப்பாடுகளே அண்மைக் காலமாகக் களனி, ஜயவர்தனபுர, கொழும்பு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதலாகும்.

அரசின் இந்தச் சூழ்ச்சியை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்" - என்று கூறினர். (ஒ-சி)

### ஆஸி.சென்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, ஜனாதிபதியின் ஆலோசகர் சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவே நேற்றிரவு பேர்த் விமான நிலையத்தைச் சென்றடைந்தது.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து நடுநிலையாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று ஆஸ்திரேலிய அரசு வலியுறுத்தி வரும் நிலையில் முழுமையான ராஜதந்திர வரவேற்பு ஜனாதிபதிக்கு வழங்கப்படாதமை குறித்து இலங்கை வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் கவலை அடைந்துள்ளனர். (உ)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள கொங்கிறீற் குழைக்கும் இயந்திரம் விற்பனைக்கு.

தொடர்புக்கு:0772479796

**விற்பனைக்கு**

56, அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் மேல்மாடி வீடு மற்றும் கச்சாய் வெளி பிள்ளையார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென்னங்காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு 0779592051

**கண்ணீர்க் காணிக்கை**

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரும், ஜெயக்குமரன் பேக்கரி உரிமையாளரும் ஆகிய கு. காந்தரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரன்

**கு. அரசரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.
நிர்வாகத்தினர், உறுப்பினர்கள், பணியாளர்கள்.

# சர்வமதத் தலைவர்களூடாக ஜனாதிபதியிடம் கூறி விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

# இந்துமாமன்றத்திடம் தமிழ் அரசியல் கைதிகள் உருக்கமான வேண்டுகோள்

கொழும்பு, ஒக்.26

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து சர்வமதத் தலைவர்களூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தமிழ் அரசியல் கைதிகள் அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தீபாவளியை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகளின் இந்தக் கோரிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்துமாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் சமூகநலத் தலைவர் சின்னத்துரை தனபாலா என்று பெயர்களைக் குறிப்பிட்டு கடிதமொன்றை அனுப்பியுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த பல வருடங்களாக மகஸின் சிறைச்சாலையில் ஜி மற்றும் எச் பிரிவுகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் எங்கள் அனைவரினதும் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் இந்தக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் பல உதவிகளையும் செய்து வருகின்றீர்கள். அதுமட்டுமன்றி, சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளுக்கும் விசேட தினங்களில் உடுதுணிகள் மற்றும் பல உதவிகளைத் தொடர்ந்தும் செய்து வருகின்றீர்கள். அது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் ஐந்து தொடக்கம் பத்து வருடங்கள், 18 வருடங்களாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்களுக்கு விடுதலை என்பது கேள்விக்குறியாகவே உள்ளமை மிகவும் வேதனையைத் தருகிறது.

எங்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி போராட்டங்களை நடத்தியும், உண்ணாவிரதங்கள் இருந்தும், எங்களது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியும் எந்தப் பலனும் இதுவரை கிட்டவில்லை. ஒவ்வொரு விசேட தினங்கள், பண்டிகைகள் வரும்போதெல்லாம் அடுத்த வருடமாவது எங்கள் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டாடமாட்டோமா என ஏங்கித் தவிப்பது மட்டும்தான். இப்படி எண்ணி எண்ணியே பல வருடங்கள் கழிந்துவிட்டன.

குடும்பங்கள் படும் வேதனைகளும் கஷ்டங்களும் சொல்லில் எழுத முடியாது. விடுதலை செய்யுமாறு எத்தனைபேரிடம் கடிதம் கொடுப்பதும் நீதிமன்றத்துக்கு அலைந்து திரிவதுமாய் காலம் போகிறது. இன்னும் எத்தனை நாள்களுக்கு..... மாதங்களுக்கு...... வருடங்களுக்கு எங்கள் வாழ்க்கை சிறைச்சாலையிலே கழிவது?

எனவே, அனைத்து சர்வமதத் தலைவர்களும் ஒன்றிணைந்து எங்களது விடுதலை சம்பந்தமாக ஜனாதிபதியிடம் எடுத்துரைத்து விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். புனர்வாழ்வளிக்கப்பட்டவர் கட்டம் கட்டமாக ஜனாதிபதியின் மனிதாபிமான நடவடிக்கையால் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர். தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டும் விடுதலைசெய்யப்படவுள்ளனர். ஆனால் எங்களின் நிலை........ எங்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு அல்லது பிணையிலாவது செல்ல ஒரு வழியேற்படுத்தித் தாருங்கள், தருவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் விடுதலைக்காகக் காத்திருக்கிறோம்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-சி)

**மாடி வீடு விற்பனைக்கு**

இல.95, இராசபாதை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உண்டு. 6 படுக்கையறை நவீன வசதிகளுடன் அமைந்த 5 குளியல் அறைகள் விசாலமான HALL இரண்டு சமையலறையுடன் கூடிய மாடி வீடு இதனை Hotel ஆகவும் அலுவலகமாகவும் பாவனைக்கு உகந்தது.

**தொடர்பு: 0774471758**

## புதிய வடிவத்தில் சீபா ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.26

பொதுமக்களது எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்ட 'சீபா' ஒப்பந்தத்தை மீண்டும் வேறு வடிவத்தில் கொண்டுவர அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்திய - இலங்கை அரசுக்கள் மத்தியில் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான 'சீபா' ஒப்பந்தத்தினூடாக இந்திய தொழிலாளர்கள் கட்டுப்பாடின்றி இலங்கைக்கு வருவதற்கு வழிசெய்யும் விதத்தில் தொழில்துறைக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குறிப்பிட்ட 'சீபா' ஒப்பந்தம் பொதுமக்களது எதிர்ப்புக்கு உள்ளாக நேர்ந்தது.

எனவே ஒப்பந்த விதிகள் பலவற்றில் திருத்தங்களை உள்ளடக்கி அதனை வேறுரூபத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக மீண்டும் அதனைக் கொண்டுவந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ -3)

## விதைநெல் நாளைவிநியோகம்

தென்மராட்சி,ஒக்.26

எழுதுமட்டுவாழ் தெற்கு (ஜே/313) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஒட்டுவெளி வயலில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வோருக்கான விதை நெல் நாளை வியாழக்கிழமை விநியோகிக்கப்படவுள்ளது.

விதை நெல்லுக்கென கமக்கார அமைப்பில் பதிவு செய்தவர்களும் ,மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் வசிக்கின்றவர்களில் இந்தப் பகுதியில் வயல்கள் உள்ளவர்களும் நாளை விதைநெல்லைப் பெற்றுக்கொள்ளுமாறு கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ஓ-207)

பாதுகாப்பு தரப்பினர் உறுதிமொழி வழங்கிய கையோடு

# யாழ். பல்கலைக்கழகத்தின் மற்றொரு மாணவன் கொடூரமாகத் தாக்கப்பட்டதைக் கண்டிக்கிறோம்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். பல்கலைக்கழக நடவடிக்கைகளை எவரும் குழப்புவதற்கு இடமளிக்க மாட்டோம் என்று இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி உறுதி அளித்து சிலமணி நேரத்தில் மற்றுமொரு இறுதிவருட மாணவன் இ.கவிராஜன் (வயது-22) இனந்தெரியாத நபர்களின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பாதுகாப்புத் தரப்பினர் உறுதிமொழி வழங்கிய பின்னரும் இப்படியான உயிர் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடர்வதால் எவ்வாறு மாணவர்கள் தமது கல்வியைச் சுமுகமாகத் தொடரமுடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்தத் தாக்குதலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:

மாணவர் ஒன்றியத்தலைவர் யாழ். நகர்ப்பகுதியில் பட்டப்பகலில் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்து மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் காலப்பகுதியிலேயே இ.கவிராஜனும் தாக்கப்பட்டுள்ளார்.

மாணவர்களது போராட்டம் தொடர்பில் யாழ். படைகளின் தளபதி, யாழ். பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர், பல்கலைக்கழக நிர்வாகத்தினரைச் சந்தித்துப் பேசியபோது, பல்கலைக்கழக மாணவர்களது கல்விச் செயற்பாடுகளைப் பாழாக்க அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியளித்திருந்தனர்.

நேற்று முன்தினம் சிவில் சமூகப்பிரதிநிதிகளுடனான சந்திப்பில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பகிஷ்கரிப்பைக் கைவிடுவது தொடர்பில் மாணவர் ஒன்றியம் பரிசீலித்து வந்தது.

இந்த நிலையிலேயே எமது மாணவன் கிளிநொச்சியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார்.

எனவே இப்படியான உயிர் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடரும் நிலையில் எவ்வாறு மாணவர்கள் தமது கல்வியைச் சுமுகமாகத் தொடர முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

எனவே மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நாடுகளை மனிதாபிமான அடிப்படையில் வேண்டிநிற்கின்றோம் - என்றுள்ளது. (ஓ-10)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

இலங்கையில் பிரபல்யமான கம்பனியின் புதிய கிளை ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமை O/L 6 பாடசித்தி மாதாந்தம் நீங்கள் நினைப்பதற்கு மேல் உழைக்க அரிய வாய்ப்பு தவற விடாதீர்கள். A/L படித்து முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம். (உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.)

நேர்முகத்தேர்வு:-
காலம்:- (28.10.2011) வெள்ளி
நேரம்:- காலை 9 மணி முதல் ந.ப.12 மணிவரை
இடம்:- TCT மண்டபம் 2 ஆம் மாடி (சுப்பர் மார்க் கட்டுக்குமேல்)
(ஆனைப்பந்தி சந்தியிலிருந்து கைலாசபிள்ளையார் கோயில் செல்லும் பாதை (நாவலர் றோட்)

மேலதிக தொடர்புகளுக்கு:-
S.மதன் 0777289283
"நம்பி வாருங்கள் வெற்றி நிச்சயம்"

**வாகனம் விற்பனைக்கு**

52 - XXXX Town ACE VAN விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு 0772056400

**NALRAVI**

**SPOKEN ENGLISH**

பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

அனைவரும் கற்கக்கூடிய கட்டணம் MCS இல்

CIMA -UK நிறுவனத்தின் Approved Listed College

CIMA-UK

Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5.30PM
Batch III : Mon- Fri 8.30AM-2PM



Qualified Lectures panel
CIMA Passing Guarantee
12 Years Experience

MCS
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

பதிவுகளுக்கும் 29.10.2011 க்கு முன் நேரில்

Supported By UNDP/JRRP

324, Palaly Road, Parameswara Junction

Full Course fee Free All Computer Diploma courses, IELTS & Diploma in Business English,TOEFL

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

SMS Your name & Course to 772395895 & Get Schol.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.